பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 09 புதன்கிழமை (22.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:147

# படையினர் - புலிகள் இறுதிச்சமர் கோர நிகழ்வாக மாறும் அபாயம்!



## ஐ.சி.ஆர்.சி உயர் அதிகாரி எச்சரிக்கிறார்

ஜெனிவா, ஏப்ரல் 22

இலங்கை அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இறுதிச்சமர் நடைபெறுமாயின், அது பெரும் கோர நிகழ்வாகி- பெரும் மனிதப் பேரவலமாகி - துரதிஷ்டமான விளைவுகளைத் தரும்.

ஆகையால் மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்களின் உயிரிழப்புக்களைத் தவிர்க்கும் பொருட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; மோதல்களை உடன் நிறுத்த வேண்டும்.

பாதுகாப்பு வலயத்தில் இரத்தக்களரியை இயன்றளவு குறைப்பதற்கு விசேட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இரண்டு தரப்புக்களும் உடனடியாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு எச்சரித்திருக்கிறார் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் (ஐ.சி.ஆர்.சி) செயற்பாட்டு இயக்குநர் பயர்றி ஹெரகன்புஹு. ([illegible] ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத்தீவில் படையினரால் மீட்கப்பட்டோரில் 4,000 பேர் தென்மராட்சி, வடமராட்சிப் பாடசாலைகளில்

## கப்பல் மூலம் அழைத்து வரப்பட்டு வெற்றிலைக் கேணியில் இறக்கப்பட்டனர்

உதயனின் பிரதேசச் செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஏப்.22

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து படையினரால் மீட்கப்பட்டவர்களில் சுமார் 4 ஆயிரம் பேர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கடல்மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் பொதுமக்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றனர். அதனால் வந்து சேர்ந்தவர்களின் உரிய எண்ணிக்கை இன்னமும் தெரியவரவில்லை. தொடர்ந்து அந்த மக்களைக் கணக்கெடுக்கும் பணிகள் இடம்பெறுகின்றன என அரச அதிபர் கே.கணேஷ் நேற்று இரவு தெரிவித்தார்.

வந்து சேரும் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் சுகாதார வசதிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்கள் தற்காலிகமாக பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகிறார்கள் - என்றும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை-கப்பல்மூலம் அழைத்து வரப்பட்டுள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

# தாம் சரணடையப் போவதில்லை என்று விடுதலைப்புலிகள் தரப்பில் அறிவிப்பு

## றொய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல்

கொழும்பு, ஏப்.22

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக்கட்டத் தாக்குதலைத் தொடுத்திருப்பதாக சிறிலங்கா படையினர் அறிவித்திருக்கும் அதேவேளையில், தாம் ஒருபோதும் சரணடையப்போவதில்லை என விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் சீவரட்ணம் புலித்தேவன் தெரிவித்திருக்கின்றார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் எவரும் கொல்லப்படவில்லை

## நாடாளுமன்றில் ஸ்ரீகாந்தாவோடு அமைச்சர்கள் வாதம்

கொழும்பு, ஏப். 22

வன்னியில் பாதுகாப்பு வலயப் பகுதிகள் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவேயில்லை என்று அரசுத் தரப்பில் நேற்று கடுமையாக மறுக்கப்பட்டிருக்கின்றது. நேற்றுமுன்தினம் பாதுகாப்பு வலயத்தில் (16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிச் சாவுகளை அறிந்து பாரிஸ் லாச்சப்பலில் ஈழத்தமிழர் வீதி மறிப்புப் போர்; கண்ணீர் புகைக்குண்டு வீச்சு!

பாரிஸிலிருந்து உதயன் செய்தியாளர்

பாரிஸ், ஏப்.22

பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் மத்தியில் லாச்சப்பல் என்னும் இடத்தில் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் நேற்று முன்தினம் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வன்னியில் மக்கள் கொல்லப்பட்ட தகவல் கிடைத்ததை அடுத்து அந்தப் பகுதி மக்கள் வீதியில் இறங்கி வாகன மறிப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டதை அடுத்து நிலைமையைக் கட்டுப்படுத்தி அமைதியை உருவாக்க பொலிஸார் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்பட்டனர்.

பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவினர். இதனால் பெரும் பதற்றமான நிலை ஏற்பட்டது அந்தப் பகுதியில் இரண்டு வாகனங்களும் ஒரு மோட்டார் சைக்கிளும் சேதமாக்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பகுதியில் நடமாடியவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

பின்னர் 60பேர் தவிர்ந்த ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# நேற்றைய தாக்குதல்களில் 473 பேர் பலி!

கொழும்பு, ஏப்.22

பாதுகாப்பு வலயத்தில் படையினர் நேற்று நடத்திய படைநகர்வுத் தாக்குதலில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவின் மருத்துவர் சிவமனோகரன் உட்பட 473 பேர் கொலையுண்டனர் என்றும் 722க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தலைவர் தனது தலைவிதியை சில மணித்தியாலங்களில் சந்திக்கநேரிடும்

## இராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஏப். 22

புலிகளின் தலைவர் பிரபாகரன் எஞ்சியுள்ள தனது போராளிகளுடன் சரணடையாவிட்டால் எதிர்வரும் சில மணித்தியாலயங்களில் அவர் தனது தலைவிதியைச் சந்திக்க நேரிடும்.''

- இவ்வாறு இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்களைப் பாதுகாக்க சர்வதேசத்திற்கு ஒரு சில மணித்தியாலங்களே அவகாசம்

## மனித உரிமை கண்காணிப்பகம் அபாயக்குரல்

நியூயோர்க், ஏப்.22

வன்னியில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உலகத்துக்கு ஒரு சில மணி நேரம் மட்டுமே உள்ளது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் அவ சர கோரிக்கை ஒன்றை வெளி யிட்டுள் ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் செவ்வாய்க்கிழமை நண்பகலுக்கு முன்னர் சரணடைந்துவிட வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்திருக்கும் நிலையிலேயே இந்த அச்சத்தை மனித உரிமைகள் கண் காணிப்பகம் வெளியிட்டுள் ளது.

''விடுதலைப்புலிகள் சரணடையா விட்டால் தான் செய்யப்போவது என்ன என்பதை மஹிந்த அறிவிக் காத போதிலும், இரத்த ஆறு ஓடலாம் என நாம் கவ லையடைந்திருக்கின்றோம்'' என நியூ யோர்க்கைத் தளமாகக் கொண்டுள்ள மனித உரிமைகள் கண்காணிப் பகத்தின் மூத்த ஆய்வாளரான அனா நிஸ்டால் தெரிவித் திருக்கின்றார்.

இந்த நிலை தொடரக்கூடாது என இந்தப் பிரச்சினை யில் சம்பந்தப்பட்ட விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் உணர்த்துவதற்கு அனைத்துலக சமூகத் துக்கு சில மணி நேரமே உள்ளது என அவர் திங்கட் கிழமை வாஷிங்ரனில் உள்ள புரூக்கிங்க்ஸ் நிலை யத்தில் தெரிவித்திருக்கின்றார்.

தேவையற்ற மற்றும் சட்டவிரோத மான முறையில் பொதுமக்களைப் படு கொலை செய்வது போர்க் குற்றங்களாகக் கருதப்படும் என்பதையும்,இவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் இதற்குப் பொறுப் பேற்க வேண்டும் என்பதையும் சர்வதேச சமூகம் அவர்களுக்கு உணர்த்த வேண்டும்'' எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா சண்முகராசா (இளைப்பாறிய அதிபர்)



இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிட மாகவும் அராலி தெற்கில் வசித்து வந்தவரு மான சுப்பையா சண்முகராசா நேற்று (21.04.2009) லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா -தங்கம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான மயில்வாகனம்-ஞானம்மாவின் மருமகனும் அமரர் அன்னபூரணத்தின் (இளைப் பாறிய ஆசிரியர்), அன்புக் கணவரும் அமரர் சுப்பையா நல்லையா (இணுவில்), குமாரலிங்கம், செல்லம்மா (இணுவில்), அமரர் இராச துரை சிவயோகம், சண்முகநாதன் கணேஸ்வரி (லண்டன்), ஜெகதீஸ்வரன் ஞானேஸ்வரி (லண்டன்), செல்வராசா இரத்தி னேஸ்வரி (இணுவில்), சுப்பையா தம்பிநாயகம் (கோண்டாவில்) ஆகியோரின் சகோதரனும் செல்வகுமரன் (லண்டன்), செந்தில்குமரன் (நோர்வே),திருக்குமரன் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் செ.மீனா (லண்டன்), செ.கலையரசி (நோர்வே), தி.வாசுகி (லண்டன்) ஆகியோரின் மாமனும் சஸ்னன், கோபிதன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
சுப்பையா குடும்பத்தினர்

### செல்லப்பா சின்னத்தம்பி



உடுவிலைப் பிறப்பிடமாகவும் உரும்பி ராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல் லப்பா சின்னத்தம்பி நேற்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் தங்கமணியின் அன்புக் கணவரும் தயானி, தயாபகரன், பிரபாகரன், பவானி, கருணாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார், குலசிங்கம், விஜயகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கஜீவன், தக்ஷிகா, சுறோஜிதா, கேதாரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2009) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### பொன்னுச்சாமி பாக்கியம்

திருநெல்வேலி, காளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி பாக்கியம் 20.04.2009 திங்கட்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - வள்ளியம்மை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை பொன்னுச் சாமியின் மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சுப்பிரமணியம், இரத்தினம் மற்றும் இராசையா ஆகியோரின் சகோதரியும் நாகேந்திரம், பரமேஸ்வரி, கமலாதேவி, பவளக் கொடி, பரலோகநாயகி, அமரர் பரலோகநாதன், நித்தியானந்தம், மதியாபரணம், பற்குணராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.
0779683001, 0779507272, 2223475

தகவல்:
குடும்பத்தினர்.

### நாகரத்தினம் ஜெயச்சந்திரன்

(ஒய்வு பெற்ற பணியாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்)

உடுப்பிட்டி பண்டகையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகரத்தினம் ஜெயச்சந்திரன் 20.04.2009 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகௌரியின் அன்புக் கணவர் ஆவார்.

அவரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்டகை,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## சர்வதேச ஊடகவியலாளர்களை வன்னிக்கு அனுப்ப அரசு தயாரா?

கொழும்பு, ஏப். 22

வன்னியில் பொதுமக்கள் கொல்லப் படவே யில்லை என்று கூறுகின்ற அரசு, இது குறித்த உண்மை நிலையை வெளியிடுவதற்காக சர்வதேச ஊடகவியலாளர்களை வன்னிக்கு அனுப்புவதற்குத் தயாரா என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் அரசிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், ஆயிரக்கணக்கான மக்கள் வன்னியில் கொல்லப் பட்டுள்ளனர் என்று இணையத்தளங்கள் செய்தி வெளியிடுகின்றன. மக்கள் தினமும் அங்கு செத்து மடிந்து கொண்டிருக்கின்றனர். சட்டரீதியான அரசு இதனை ஒருபோதும் செய்யாது.

ஆனால், மக்கள் கொல்லப்படுகின் றனர் என்பதை இந்த அரசு மறுக்கின்றது. அப்படியென்றால், இந்த விடயத்தில் உண்மை நிலையைத் தெளிவுபடுத்து வதற்காக சர்வதேச ஊடகவியலாளர்களை வன்னிக்கு அனுப்புவதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று நான் கேட்க விரும்பு கிறேன் - என்றார். (அ-சி)

## வைத்தியர் சிவமனோகரனும் குண்டுத் தாக்குதலில் மரணம்!

கொழும்பு, ஏப்.22

வன்னியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள வலைஞர் மடம் பகுதிமீது நேற்று மதியம் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் டாக்டர் உளநல மருத்துவர் சிவமனோகரன் உட்படப் பலர் உயிரிழந்துள்ளனர் என்று இணையத்தளங் கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த பல மாதங்களாக வன்னியில் குண்டுத்தாக்குதல்களால் பெருமளவில் காயமடையும் மக்களுக்குச் சிகிச்சையளித்துவந்த ஒருசில மருத்துவர்களில் சிவமனோகரனும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று நண்பகல் வைத்தியசாலைப் பகுதிகளுக்கு அருகேயும் நடத்தப்பட்ட கொத்துக் குண்டுத் தாக்கு தலில், தனது வைத்தியசாலையில் சேவையில் ஈடுபட் டிருந்த வேளையிலேயே அந்த வகைக் குண்டுத் தாக் குதலுக்கு இலக்காகி டாக்டர் சிவமனோகரன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் சத்திய மூர்த்தி பி.பி.சிக்கு தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றுச் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலில் 500பேர் காயமடைந்ததாகவும் ''கிறீன் ஓஷன்'' கப்பல் இன்று புல்மோட்டைக்குச் செல்லும் பட்சத்தில் காயம டைந்தோரை அதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் நோயாளர் நிரம்பி வழிகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப்.22

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடு திகளில் நோயாளர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பெரும் இடநெருக் கடி ஏற்பட்டுள்ளது.

விடுதிக் கட்டில்கள், தரை மற்றும் விறாந்தை கள் அனைத்தும் நோயாளர்களால் நிறைந்ததை அடுத்து வைத்திய சாலை வளாகத்தில் உள்ள மிதிவண்டிப் பாதுகாப்பு நிலையங்கள், வெளி நோயாளர் தங்கும் அறை, அம்புலன்ஸ் அறை அனைத்தும் நோயாளர்கள் தங்கியுள்ளனர்.

இதேவேளை தினமும் பெருமளவு நோயாளர் கள் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விடுதிகளில் தங்கியுள்ள பெரும்பாலான நோயாளர்கள் நலன்புரி நிலை யங்களில் இருந்து கொண்டுவரப்பட்டவர்களாவர். (1-207)

## வரியிறுப்பாளர் சங்கம் புனரமைக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஏப்.22

சாவகச்சேரி நகரசபை வரியிறுப்பாளர் சங்கம் புனரமைக்கப்படவுள்ளது.

புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு சாவ கச்சேரி டச் வீதிஅகிலாண்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும் என ஏற்பாட் டுக்குழுவினர் அறிவித்துள்ளனர். (1-207)


### சமையல் ஆள் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சைவ உணவகத்திற்கு சமையல், ரொட்டி, அப்பம் தயாரிக்கக் கூடிய வேலையாள் உடனடியாகத் தேவை.

தொடர்பு:- 195, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



### தவறிவிட்டது

10, யாழ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரி யுடைய தாமோதரம்பிள்ளை மனோரஞ்சிதம் என்ப வரின் தேசிய அ.அ.(5[illegible]2400[illegible]) தவறிவிட்டது. [illegible] மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 23.03.2009 திங்கட்கிழமை அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் கணபதிப்பிள்ளை பவன்



அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (22.04.2009) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு பற்றுமாறு அன்புடன் வேண்டுகின் றோம்.

அத்துடன் எமது குடும்ப அங்கத்தவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வருகை தந்தவர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலமும், நேரில் வந்தும் இரங்கல் தெரிவித்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித நேயம் என்பது வெறும் அலங்காரச் சொல்தானா...?

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலயத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஒரே நாளில் படை நடவடிக்கையின்போது கொலையுண்டிருக்கிறார்கள். 1300 இற்கும் மேற்பட்டவர்கள் காயமுற்றிருக்கிறார்கள். சர்வதேச அவதானிகள் தெரிவித்த மனிதப் பேரவலம் அங்கு நிகழ்ந்திருக்கிறது. முல்லைத்தீவுக் கடற்கரையில் இரத்த ஆறு ஓடும் அபாயம் இருப்பதாக ஐ.நா.உட்பட பல தரப்புகளும் கவலையுடன் ஊகம் தெரிவித்திருந்த போதிலும் எவராலும் அதனைத் தடுக்க முடியாமற் போயிற்று! உலக வரலாற்றில், சமீப காலத்தின் பெரும் மனித அழிப்பு நடைபெற்றிருக்கிறது.

நினைக்கவே இரத்தத்தை உறைய வைக்கும் இந்த மனித உயிர் இழப்புக் கண்டு ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகள் அனைத்தும் வெட்கித் தலைகுனியவேண்டும்'.

உரிய காலத்தில், உரிய வேளையில் தமது சக்திகளைப் பயன்படுத்தி இந்த மனித அழிவை, தமிழர் இன அழிப்பைத் தடுத்து நிறுத்தவில்லை என்ற பழியை சர்வதேசம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். இது சரித்திரத்தின் கறுப்பு அத்தியாயங்களில் ஒன்றாகிவிட்டது.

இத்தகைய ஓர் மனிதப் பேரழிவு கொடுமை எந்த இனத்திற்கு ஏற்பட்டிருந்தாலும் அது மனிதநேயத்திற்கு விழுந்த பேரடியாகும்; பேரிடியாகும். இதுபோன்ற மனித அழிவு உலகில் வேறெங்கு நடைபெற்றாலும் தாங்க முடியாதே.

அது குறித்த அக்கறைக்குப் பதிலாக, அசட்டைத் தனம் மேலோங்கி நின்றதாலேயே, ஏனைய நானாவித ஒவ்வாத எண்ணங்கள் வந்து மேவி இப்படியொரு துன்பியல் பேரழிவைத் தந்திருக்கிறது.

போர் முடிவுக்கு வந்ததும் தமிழர்களின் உரிமைகள் வழங்கப்படும், பிரச்சினை தீர்க்கப்படும் என்ற கோஷங்கள் அர்த்தமற்றுப் போய் விட்டன. இன ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன ஒரேயடியாக நிர்மூலமாகிவிட்டன. மக்கள் அழிந்த பின்னர் அவை வெறும் வேதாந்தமாகவே மிஞ்சி நிற்கின்றன.

முல்லைத்தீவில் ஒருநாளில் ஓராயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழக்க நேரிட்டமை மனித உரிமை, மனிதநேயம் என்பவை எல்லாம் வெறும் அலங்காரச் சொற்களே அன்றிச் கவைக்கும் உதவாதவை என்பதனை வெளிப்படுத்தி உள்ளன.

இது குறித்து முழு மானிட உலகமும், தமது இயலாமை குறித்து வெட்கித் தலைகுனிய வேண்டும்.

உயிர்கள் காப்பாற்றப்படவேண்டியவை, பேணப்படவேண்டியவை. அழிக்கப்படவேண்டியவை அல்ல என்பதனை அர்த்தபுஷ்டி உள்ள தாக்க வேண்டுமென்ற சிந்தனை செயலுருப் பெறுவதற்கு பிடிவாதமும்மேலோங்கும்போக்கும் மனிதர்களிடம் இருந்து அகல வேண்டும் என்பதனை வன்னிப் பேரழிவு எடுத்தியம்புகிறது.

போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள லட்சக் கணக்கான மக்களில் எஞ்சியுள்ளவர்களின் கதி என்னவாகப்போகிறது என்பதனை நினைத்துத் தமிழ் உறவுகளின் நெஞ்சங்கள் இப்போது திணுக்குறுகின்றன. அவர்களைக் காப்பாற்ற வேண்டியது அனைத்துத் தரப்பினரதும் பொறுப்பாகும். ஆனால் ஏற்கனவே உண்டான இழப்புக்களின்போது மக்களின் உயிர்கள் காப்பாற்றவேண்டியவை, பறிக்கப்படவேண்டியவை அல்ல என்ற மனித நேயம் முதலிடம் பெற்றிருக்கவில்லை.

அங்கே எஞ்சியுள்ளவர்களைக் காப்பாற்றுவதற்கேனும் ஐ.நா.உட்பட்ட சர்வதேசம் நேர்மையுடனும் மனித நேயத்துடனும் விரைந்து செயற்படுவதற்கு மனங்கொள்ளுமா? அதுவே இப்போதைய உடனடித்தேவை. தமிழர் நெஞ்சங்களை மீண்டும் மீண்டும் உறைய வைக்காமல் தடுக்க வழி ஒன்று பிறக்காதா? உலக நீதியின் பால், மனுநீதியின் பால், மனித நேயம் சிறிதளவேனும் பிறக்கக்கூடாதா?

# வன்னியில் இறுதிக் கட்ட மோதல்களில் சிறுவர்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடும்

## யுனிசெவ் அமைப்பு அச்சம்

கொழும்பு, ஏப்.22

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கப் படையினருக்கும் இடையில் வன்னியில் இடம்பெற்று வரும் இறுதிக் கட்டப் போராட்டம் காரணமாக சிறுவர்களுக்கு பெரும் ஆபத்து ஏற்படக்கூடுமென 'யுனிசெவ்' அமைப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

அரசாங்கப் படையினர் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்துவதன் காரணமாகவும், புலிகள் பொதுமக்களை தடுத்து வைத்திருப்பதனாலும் சிறுவர்கள் உயிரிழக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த யுத்தம் காரணமாக கொல்லப்படும் பொதுமக்களின் எண்ணிக்கை பெருமளவு உயர்வடையக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

'மோதல்கள் தொடர்ந்து இடம்பெறுமாயின், விடுதலைப் புலிகள் பொதுமக்களை மோதல் இடம்பெறும் பகுதிகளில் இருந்து வெளியேறுவதைத் தடுத்தால் மேலும் பல சிறுவர்கள் உயிரிழப்பார்கள்' என யுனிசெப் தெற்காசிய வலயத்திற்கான பணிப்பாளர் டானியல் டூல் தெரிவித்துள்ளார்.

யுத்த வெற்றி குறித்து காட்டும் முனைப்பைவிட சமாதானத்தை வென்றெடுப்பதற்கு அனைத்துத் தரப்பினரும் அதிக அக்கறை காட்ட வேண்டுமென யுனிசெப் தனது அறிக்கையில் கேட்டுள்ளது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் காணப்படும் அகதி முகாம்களில் சன நெரிசல் அதிகரித்துச் செல்வதாகவும், இதனால் அகதிகள் நெருக்கடிகளை எதிர்நோக்கக் கூடும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை நிவாரணங்களை வழங்குவதற்கு 3.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாக யுனிசெவ் அறிவித்துள்ளது. (50)

# தந்தை செல்வாவின் 32ஆவது நினைவுநாள்

யாழ்ப்பாணம்,ஏப்.22

தந்தை செல்வாவின் 32ஆவது நினைவுநாள் நிகழ்வுகள் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ்.முற்றவெளியில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவலர் குழுத்தலைவர் அருட்கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் வரவேற்புரையினையும், அஞ்சலியுரையினை மௌலவி முகமட் பாஹிட், வண.பிதா எம்.வி.இ.இரவிச்சந்திரன், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தந்தை செல்வா அறங்காவலர் குழு உறுப்பினர் பொ.கனகசபாபதி நன்றியுரையினை நிகழ்த்துவார். (9)

# பாதுகாப்பை உடன் உறுதிப்படுத்துமாறு வவுனியா அரச வைத்தியர்கள் கோரிக்கை

வவுனியா, ஏப்.22

வவுனியா பொது வைத்தியசாலையின் பெண் நோயியல் வைத்திய நிபுணர் மீரா மொகிதீன் நேற்று முன்தினம் இனந் தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து, வவுனியா அரச வைத்தியர்கள், தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவது தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளரும் இன்னுமொரு அதிகாரியும் உடனடியாக வவுனியாவுக்கு வந்து பேச்சுக்கள் நடத்த வேண்டும் என அவசர கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கொலையைக் கண்டித்துள்ள வைத்தியர்கள், உயிர்களைப் பாதுகாக்கின்ற அத்தியாவசிய மனிதாபிமான வைத்திய சேவையில் ஈடுபட்டுள்ள தமது பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்படுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

அத்துடன் தமது பாதுகாப்பு உரிய முறையில் உறுதிப்படுத்தப்படுவது தொடர்பான அவசர பேச்சுக்களில் கலந்து கொள்வதற்[illegible]ச்சு அதிகாரிகள் வவுனியாவுக்[illegible]று மதியத்திற்குள் வருகை தராவிட்டால், அனைத்து வைத்தியர்களும் வவுனியாவைவிட்டு வெளியேறிச் சென்று விடத்தீர்மானித்திருப்பதாகவும்' தெரிவித்திருக்கின்றார்கள். (50)

# இடம் பெயர்ந்து வருபவர்களைத் தங்க வைக்க வவுனியாவில் மேலும் நான்கு பாடசாலைகள்

வவுனியா, ஏப்.22

பாதுகாப்பு வலயப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வந்துள்ள சுமார் 5 ஆயிரம் பேரைத் தங்கவைப்பதற்காக வவுனியாவில் நான்கு பாடசாலைகளில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ஏற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் மாலை வவுனியா செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்ற அவசர உயர் மட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம், தாண்டிக்குளம் பிரமண்டு வித்தியாலயம், ஆண்டியா புளியங்குளம் பாடசாலை, முதலியாகுளம் பாடசாலை ஆகியவற்றில் ஓமந்தை பகுதிக்கு ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ள 5 ஆயிரம் பேரையும் தங்க வைப்பது என இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைகளில் இடம்பெயர்ந்தவர்களுக்கான கழிப்பறை வசதிகள், குடிதண்ணீர் வசதிகள் மற்றும் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் யுனிசெவ் ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் நேற்றுமுன் தினம் காலை வவுனியாவுக்கு இராணுவத்தினரால் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 500 பேர் மனிக்பாம் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். -

## நூலக நடமாடும் சேவை

உலக புத்தக தினத்தையொட்டி சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் நடமாடும் நூலக சேவையினை நடத்தவுள்ளனர்.

நாளை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை மட்டுவில், சந்திரபுரம் ஆகிய பகுதிகளில் நடமாடும் நூலக சேவை இடம்பெறும்.

நடமாடும் நூலக சேவையில் நூல்கள் இரவல் கொடுத்தல், புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல் ஆகிய சேவைகள் இடம் பெறும்.கடந்த வருடம் சரசாலைப் பகுதியில் நடமாடும் நூலக சேவை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (50-207)

# அதிபர் சேவைச் சங்கப் பிரதிநிதிகள் கல்வி அமைச்சருடன் சந்திப்பு

## 12 விடயங்கள் தொடர்பாக ஆராய்வு

அச்சுவேலி, ஏப்.22

இலங்கை அதிபர் சேவை- மற்றும் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களின் தேவைகள் தொடர்பாக இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவைச்சங்கத்தின் பிரதிநிதிகள் குழு, கல்வி அமைச்சா தலைமையிலான உயர் மட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியது.

கல்வி அமைச்சில் நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தையில் இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் 12 விடயங்களை முன்வைத்துக் கலந்துரையாடினர்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜெயந்த, கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர் உட்பட கல்வி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர்.

தரம்பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் சார்பில் சங்கத்தின் செயலாளர் எஸ்.யூ.காரியவாசம், உப தலைவர் அன்பு ஜவகர் ஷா பொருளாளர் ஏச்.பாலசூரியா ஆகியோர் உள்ளடக்கிய குழுவினர் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையின் போது அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகள், அதிபர் சேவையில் உள்ளவர்களின் பதவி உயர்வுகள், புதிய நியமனங்கள், அதிபர், ஆசிரியர் சேவையில் அதிபர் சேவை தொடர்பான நிலைப்பாடு, இலங்கை அதிபர் சேவை, ஆசிரியர் சேவையின் புதிய கோவைப் பிரமாணக் குறிப்புகள் உள்ளடங்கலாக 12 விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

பேச்சுவார்த்தை தொடர்பாக தரம் பெற்ற அதிபர்கள் சேவைச்சங்கத்தின் உபதலைவர் அன்பு ஜவகர் ஷா கருத்து தெரிவிக்கையில்:

பேச்சுவார்த்தையில் சங்கத்தின் கோரிக்கைகளை அமைச்சர் ஏற்றுக் கொண்டதாகவும், உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் மற்றும் அதிகாரிகள் கூறியதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், நிதிநிலை மற்றும் நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை பொருத்தமான முறையில் அனுசரித்தே போகவேண்டி இருப்பதால் அவற்றை நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியாத நிலையில் இருப்பதாக கல்வி அமைச்சின் சார்பில் தெரிவிக்கப்பட்டதாகவும்-அவர்கூறினார். (09-04-11)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 10 | 23.04.2009<br>வியாழக்கிழமை |
| திதி: | திரயோதசி<br>பி.ப. 11.18 வரை |
| நட்சத்திரம்: | உத்திரட்டாதி<br>பி.ப. 01.48 வரை |
| சுபநேரம்: | 07.50-09.00 |
| ராகுகாலம்: | 01.30-03.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு விமானம் மூலம் நிவாரணப்பொருள்கள் வழங்குக!

## மத்திய அரசுக்கு விஜயகாந்த் கோரிக்கை



சென்னை, ஏப். 22

பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு விமானம் மூலம் நிவாரணப் பொருள்களை வழங்க வேண்டும் - என்று மத்திய அரசுக்கு தே.மு. தி.க. தலைவர் விஜயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை. வருமாறு -

இலங்கையில் இராணுவ நடவடிக்கை காரணமாக போர் முனையில் மூன்றரை லட்சம் தமிழ் மக்கள் சிக்கியுள்ளனர். உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், இருக்க இடமின்றியும், சொந்த நாட்டிலேயே அகதிகளாக உள்ள அப்பாவித் தமிழ் மக்கள் மீது பீரங்கிகளின் மூலம் தாக்குதல் நடத்தப்படுவதும், ரொக்கெட் எரிகுண்டுகள் வீசுவதும் இடைவிடாமல் நடைபெறுகின்றன..

வயோதிபர்கள், தாய்மார்கள், குழந்தைகள் என்று யாரும் விதிவிலக்கு அல்ல. தினந்தோறும் நூற்றுக்கணக்கில் மக்கள் சாவதும், பல்லாயிரக்கணக்கில் காயமுறுவதும் வழக்கமாகிவிட்டது. சரியான மருத்துவமனைகளோ, மருத்துவர்களோ, மருந்துகளோ கிடையாது. உலகநாடுகளை சேர்ந்த அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும், பத்திரிகையாளர்களும், இந்தப் பகுதிக்குள் அனுமதிக்கப்படுவதில்லை. நம்முடைய கண் எதிரிலேயே மனிதாபிமானம் அற்ற இந்தத் தமிழினப் படுகொலை நடந்தேறி வருகிறது.

உலகநாடுகள் அனைத்தும் மனிதாபிமான அடிப்படையில் போர் நிறுத்தம் வேண்டும் என்று கேட்டுள்ளன. இந்தியாவும் போர் நிறுத்தத்தை வற்புறுத்துகிறது.

விடுதலைப்புலிகள் இயக்கமும் போர் நிறுத்தம் செய்ய தயார் என்றும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர அரசியல் தீர்வு தான் வழி என்றும் அறிவித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் நமது உயிரினும் மேலான தமிழ் மக்கள் செய்வதறியாது திகைக்கின்றனர். அங்கு நடக்கவுள்ள பெரும் மனித படுகொலையைத் தடுக்க இந்திய இராணுவத்தை அந்தப் பகுதிக்கு அனுப்பி தமிழ் மக்களின் உயிர்களை மீட்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். பாதிக்கப்பட்ட போர் முனைப் பகுதி களில் ஐ.நா. சபை தலையிட்டு போர் நிறுத் தம் செய்ய இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் இல்லை.

குறைந்த பட்சம் 1987இல் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் செய்தமைபோல, இலங்கையில் தினந்தோறும் வாடி வதங்கியும், படுகாயமுற்று அவதிப்பட்டு வரும் தமிழ் மக் களுக்கு இந்திய அரசு, உணவு மற்றும் மருந்து வகைகளை விமானங்களின் மூலம் நேரடியாக கிடைக்கும் வகையில் போட வேண்டும் என்று தே.மு. தி.க. சார்பில் வற்புறுத்துகிறேன் - என்றுள்ளது.

## பிரபா குறித்து கலைஞர் பேட்டி: கருத்துக் கூற பிரதமர் மறுப்பு



புதுடில்லி, ஏப். 22

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தீவிரவாதி அல்லர் என கருணாநிதி கூறியமை குறித்து கருத்துக் கூற பிரதமர் மன்மோகன் சிங் மறுத்து விட்டார்.

கருணாநிதியின் பேட்டி குறித்து செய்தியாளர்கள் கேட்டதற்கு -

இந்த விடயம் குறித்து கட்சியின் செய்தித் தொடர்பாளர் கபில் சிபில் கருத்து கூறி விட்டார். எனவே, இந்த விடயம் குறித்து மேற்கொண்டு பேச விரும்பவில்லை என மன்மோ கன் சிங் குறிப்பிட்டார்.

பிரபாகரனைப் பற்றிய கருணாநிதியின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்து என்றும், புலிகள் அமைப்பை தீவிரவாத அமைப்பாகவும், பிரபாகரனை தீவிரவாதியாகவுமே காங்கிரஸ் கருதுகிறது என கபில் சிபில் கூறி யிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தியச் செய்திகள்**

# போர் நிறுத்தத்துக்கு சோனியா நடவடிக்கை; உண்ணாவிரதப் போரை உடன் கைவிடுங்கள்!

## கருணாநிதி வேண்டுகோள்

சென்னை, ஏப். 22

இலங்கையில் போர்நிறுத்தம் குறித்து சோனியாகாந்தி உரிய நடவடிக்கை எடுப்பார் என்றும், உண்ணாவிரதம் இருக்கின்ற சகோ தரிகள் உடனடியாக அதைக் கைவிட வேண் டும் என்றும் முதல்வர் கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு -

தமிழ் ஈழம் அமைந்தால் அதனை வரவேற்கின்ற முதல் கட்சியாக தி.மு.க. இருக்கும் என்று நான் எப்போதே கூறிவிட்டேன். பேரவையிலும் அதனைத் தெரிவித்திருக்கிறேன். ஆனால் அதிலே என்ன நிலை என்று என்னைக் கேட்கும் டாக்டர் ராமதாஸ், புலிகளின் மீதான தடையை நீக்க வேண்டுமென்று வைகோவின் ம.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே கூறியிருப்பது பற்றி உங்கள் தோழமைக் கட்சியின் தலைவியின் நிலைப்பாடு என்ன வென்று கேட்டு உலகத்திற்கு கூறுங்கள்.

தோழமைக்கட்சியாக அவர் இருந்த போதே அன்றாடம் தி.மு.க. அரசு மீது குறை கூறுவதில் அலாதி இன்பம் கண்டு வந்தார். இப்போது கேட்கவா வேண்டும்.

நான் நேற்றுமுன்தினம் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழியை பெண்கள் உண்ணாவிரதம் இருந்த இடத்திற்கு அனுப்பி உண்ணாவிரதத்தை அவர்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளச் செய்தேன். அதற்கு உண்ணாவிரதம் இருந்த பெண்கள், முதலமைச்சர் அறிவித்ததைப் போல இலங்கையில் உள்ள தூதரகத் தொடர்புகளை இந்திய அரசு ரத்துச் செய்கிறது என காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியிடமிருந்து உறுதிமொழி வேண்டுமென்று சொல்லியிருக்கின்றனர்.

அதுகுறித்து காங்கிரஸ் கட்சியின் தலைவி, சோனியா காந்தியிடம் பேசுகிறேன் எனவும், போர் நிறுத்தம் பற்றி உரிய நடவடிக்கைகளை அவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன் எனவும் நான் தெரிவித்து, என் வேண்டுகோளுக்கு இணங்கி உண்ணாவிரதம் இருக்கின்ற சகோதரிகள் உடனடியாக அதை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது.

# பிரபாகரன் எப்போது மடிவார் என்று எதிர்பார்த்திருப்பவர்தான் கருணாநிதி

## வைகோ குற்றச்சாட்டு

சென்னை, ஏப். 22

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு, கருணாநிதி முன்கூட்டியே இரங்கல் கவிதை எழுதி வைத்திருப்பார். ஆனால், அவரது கனவு பலிக்காது. பிரபாகரன் 100 ஆண்டுகள் நலமுடன் வாழ்வார் என்று தென்சென்னை மாவட்ட ம.தி.மு.க. பொதுக்கூட்டத்தில் வைகோ பேசினார்.

தொடர்ந்து அவர் பேசியவை வருமாறு -

தற்போது, தனித்தமிழ் ஈழம் அமைய அ.தி.மு.க. பாடுபடும் என்று அக்கட்சி அறிவித்திருக்கின்றமை மிக முக்கியமான விடயம். முடிவெடுத்தால் அந்த முடி வில் உறுதியாக இருக்கக்கூடியவர் ஜெயலலிதா என்பது அனைவருக்கும் தெரியும்.

பிரபாகரன்பிடிபட்டால்போரஸ்மன்னனைப் போல் நடத்த வேண்டும் என்று கருணாநிதி அறிக்கை விடுத்தார். பிரபாகரன் கொல்லப்பட்டால் வருத்தப்படுவேன்' என்று கூறியிருக்கிறார். பிரபாகரன் எப்போது சாவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர் கருணாநிதி.

முன்கூட்டியே பிரபாகரனுக்கு இரங்கல் கவிதையை கருணாநிதி எழுதி வைத்திருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவர் எண்ணம் பலிக்காது; பிரபாகரன் 100 ஆண்டுகள் நலமுடன் வாழ்வார். எனக்கு மரண தண்டனை விதித்தாலும், பிரபா வுக்கு ஆதரவாகவே பேசுவேன் - என்றார்.

# 10 ஆவது நாளாக உண்ணாவிரதமிருக்கும் பெண்களைச் சந்தித்து கனிமொழி ஆறுதல்



சென்னை, ஏப். 22

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்பட வலியுறுத்தி சென்னையில் ம.தி. மு.க. அலுவலகத் தில் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும்பெண்களுக்கு கவிஞர்கனிமொழி எம்.பி. நேரில் சென்று கண்ணீர் மல்க ஆறுதல் கூறினார்.

இலங்கையில் உடனடியாக் போர் நிறுத்தம் செய்ய சோனியா காந்தி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி 'ஈழத்தமிழர்படுகொலைக்கு எதிரான பெண்கள்' அமைப்பை சேர்ந்த 20 பெண்கள் சென்னை எழும்பூரில் உள்ள ம.தி. மு.க. தலைமை அலுவலகமான 'தாயகம்' வளாகத்தில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அவர்களின் போராட்டம் நேற்று 10 ஆவது நாளாக நீடித்தது. ஆரம்ப நாள் முதல் சாப்பிடாமல் இருந்து வருவதால் அவர்கள் மிகவும் சோர்வாக காணப்பட்டார்கள். 11 பேரின் உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது.

இந்தச் சூழ்நிலையில், நேற்றுமுன் தினம் மாலை 6.30 மணியளவில் தி.மு.க. எம்.பி. கவிஞர் கனிமொழி கருணாநிதி திடீரென்று ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகத்திற்கு சென்றார்.

அங்கு உண்ணாவிரதம் இருந்து வரும் பெண்களைச் சந்தித்து அவர்களின் உடல் நலனை அக்கறையோடு விசாரித்தார். தரையில் உட்கார்ந்தவாறே துயரத்தோடு அவர்கள் கூறியதை கண்ணீர் மல்க கேட்டார்.

இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படும்போது எங்கள் 20 பேரின் உயிர் ஒரு பொருட்டே அல்ல என்று அவர்கள்கண்ணீருடன் சொன்னபோது, கனிமொழியின் கண்களிலும் கண்ணீர் பொங்கியது.

அவர்களிடம் தொடர்ந்து அவர் பேசுகையில், ''இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதலை யாருமே நியாயப்படுத்தவில்லை. போர் நிறுத்தம் ஏற்பட முதலமைச்சர் கருணாநிதி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். உங்கள் கோரிக்கையை சோனியாகாந்தி கவனத்திற்கு கொண்டுசெல்வேன். உங்களுக்கு ஒன்றும் ஆகிவிடக்கூடாது. நீங்கள் நலமாக இருந்தால்தானே இலங்கைத் தமிழர்களுக்காக போராட முடியும். எனவே, தயவு செய்து உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடுங்கள் - என்று வேண்டுகோள் விடுத்தார்.

# நளினியை விடுதலை செய்யக்கூடாது சி.பி.ஐ. நீதிமன்றில் தமிழக அரசு மனு



சென்னை, ஏப்.22

ராஜீவ் கொலைக் குற்றவாளிகளான நளினி உட்பட 7 பேரை விடுவிக்கக் கூடாது எனக் கோரி உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசும், சி.பி. ஐயும் பதில் மனுத் தாக்கல் செய்துள்ளன.

திருச்சியை சேர்ந்த வேலுசாமி என்பவர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ராஜீவ் கொலை பற்றி ஜெயின் கமிஷன் விசாரித்து, மத்திய அரசுக்கு அறிக்கை கொடுத்தது. அதில் கூறியபடி சி.பி.ஐ. விசாரணையை முழுமையாக முடிக்கவில்லை. அதற்குள் நளினி உட்பட 26 பேருக்கு தண்டனை வழங் கப்பட்டமை தவறு. எனவே, சிறையிலுள்ள நளினி உட்பட 7 பேரை விடுவிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த மனு, நீதிபதிகள் எலிப்பி தர்மராவ், செல்வம் முன்பு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

அரசுசார்பில்கூடுதல் அரசு சட்டத்தரணி இளங்கோ, சி.பி.ஐ. தரப்பில் சட்டத்தரணி சந்திரசேகர் ஆகியோர் தனித்தனியாகப் பதில் மனுத்தாக்கல் செய்தனர். அதில், ராஜீவ் காந்தியைக் கொலை செய்த குற்றவாளிகள் 26 பேருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்த பின்னர் இவர்களை விடுவிக்கக் கோரி உயர் நீதிமன்றத் தில் மனுத் தாக்கல் செய்தது விசாரணைக்கு உகந்தது இல்லை.

எனவே, மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறியிருந்தனர். வாதங்களை கேட்ட நீதிபதிகள் விசாரணையை தள்ளி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரில் தீவிர சோதனை

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.நகரப் பகுதியிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கைகள் திடீரெனத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்றுமுன்தினம் நண்பகல் முதல் மாலைவரை இந்தச் சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்தன.

வீதிகளில் பயணம் செய்தோர் வழி மறிக்கப்பட்டு அடையாள அட்டைப் பரிசோதனைக்கும் உடற் பரிசோதனைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

அத்துடன் நகருக்குள் வந்த வாகனங்களும் நகரை விட்டு வெளியேறிய வாகனங்களும் சோதனையிடப்பட்டன. (50)

## வெளியிணைப்பு இயந்திரம் பூட்டி தொழில் செய்ய அனுமதி

வண்ணை,ஏப்.22

யாழ்.குடாக்கடல் பிரதேசத்தில் கடந்த ஐந்து தினங்களுக்குப் பின்னர் படையினர் வெளி இணைப்பு இயந்திரம் பூட்டி மீன்பிடிக்கச் செல்வதற்கு நேற்றுமுதல் அனுமதி வழங்கியுள்ளனர்.

வாரத்தில் செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை தவிர்ந்த ஏனைய தினங்களில் வெளி இணைப்பு இயந்திரம் வள்ளங்களில் பூட்டி மீன்பிடிக்கப் படையினர் கடற்றொழிலாளர்களை அனுமதித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (1-160)

## பயிர்கள் சேதம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையால் தென்மராட்சியில் சிறு த[illegible]யப் பயிர்கள் கத்தரி, மிளகாய்ச் செடிகள் என்பன அழிந்துள்ளன.

பெருமழை காரணமாக வயலில் வெள்ளம் தேங்கி நிற்பதால் வயலில் பயிரிட்ட கௌபி, பயறு, உழுந்து, சணல் உள்ளிட்ட பயிர்கள் யாவும் அழுகி சேதமடைந்துள்ளன. அத்துடன் கத்தரி, பயிற்றை, வெண்டி என்பனவும் அழிந்து சேதமடைந்து காணப்படுகின்றன.

வெள்ளநீரை அப்புறப்படுத்த நீர் இறைக்கும் இயந்திர உதவியுடன் விவசாயிகள் நடவடிக்கை எடுத்தபோதிலும் பயிர்கள் அழிவடைந்ததால் கவலையில் ஆழ்ந்துள்ளனர். (4-131)

## மூளாயில் தாதியர் பயிற்சிநெறி

சுழிபுரம்,ஏப்.22

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சா[illegible] நிர்வாகத்தினர் இலவச தாதியர் பயிற்சிநெறியை ஆரம்பிக்கவுள்ளனர். இந்த பயிற்சிநெறி வரும் மே முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

விவாகம் ஆகாத 18 முதல் 26 வரையானவர்கள் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமைகளுடன் ஏப்ரல் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குச் சமுகமளிக்குமாறு பணிப்பாளர் சபையினர் வேண்டியுள்ளனர்.

தற்போது வைத்தியசாலைக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதுடன் வறுமைக் கோட்டுக்குட்பட்ட கண்பார்வையற்று வாழும் நோயாளர்களுக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் குகதாசன் இலவசமாகச் சத்திர சிகிச்சை செய்ய முன்வந்துள்ளதாகவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (4-28)

## தார் பரல்கள் வந்து சேர்ந்ததால் வீதிப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வீதி புனரமைப்புப் பணிக்கென 500 தார் பரல்கள் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கே இந்தத் தார் பரல்கள் எடுத்துவரப்பட்டதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தார் பரல்கள் வந்து சேர்ந்ததையடுத்து வீதி புனரமைப்புப் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தார்ப் பற்றாக்குறையினால் வீதியில் சேதமடைந்த பகுதிகள் தார்க் கலவை மூலமுமே தற்போது சீர்செய்யப்பட்டு வருகின்றன.

அதுவும் கடந்த வருட இறுதியில் யாழ்.குடாநாட்டைக் கலக்கிய அடைமழை மற்றும் நிஷா புயல் போன்றவற்றால் சேதப்பட்ட பிரதான வீதிகள் முழுமையான புனரமைப்பு இன்றித் தார்க் கலவை மூலமே ஆங்காங்கே சீர்செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-224)

## உள்ளூராட்சி திணைக்களத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் ஊடாக விழிப்புணர்வு மாதங்கள் பிரகடனம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

உள்ளூராட்சித் திணைக்களம் தமது திட்டங்கள் பொதுமக்களை இலகுவில் சென்றடையக்கூடிய விதமாக உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் மாதங்களை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மாதங்களாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

* ஏப்ரல் 2009 - திண்மக் கழிவகற்றல் தொடர்பான மக்கள் விழிப்புணர்வு மாதம்.
* மே 2009 - வடிகால் புனரமைப்பு விழிப்புணர்வு மாதம்.
* ஜூன் 2009 - இளைஞர்கள், யுவதிகள் மற்றும் மாணவர்களுக்கு உள்ளூராட்சி மன்றச் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு மாதம்.
* ஜூலை 2009 - ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் தொடர்பான மக்கள் விழிப்புணர்வு மாதம்.
* ஓகஸ்ட் 2009 - வடிகால் புனரமைப்பு எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு மாதமும் சர்வதேச தினங்களால் ஒதுக்கப்பட்ட தினங்களில் அத்தினங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கை உள்ளூராட்சி மன்றங்களில் நடத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத்திற்கான இலச்சினை இல்லாமல் இருப்பின் ஆலோசனைச் சபையின் உதவியுடன் சபைக்கான இலச்சினையையும் அமைப்பதுடன், பிரதேச மலர், பிரதேச மரம் என்பவற்றையும் மக்களின் ஏகோபித்த விருப்பத்துடன் தெரிவு பிரதேச தனித்துவத்தை சிறபபிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-131)

## கல்வியியலாளர்கள் நியமன நிகழ்வில் கலந்துகொள்ள முடியவில்லை

### யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோர் கவலை

அச்சுவேலி,ஏப்.22

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் IIIஇற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்ள முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அதற் கான அழைப்புக் கடிதங்கள் தனிச் சிங்கள மொழியில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கடந்த 20ஆம் திகதி கல்வி அமைச்சில் நடைபெற்றது.

யாழ்ப்புாணத்தில் இருந்து நியமனம் பெற்றவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் 17ஆம், 18ஆம் திகதிகளில் கிடைக்கப்பெற்றமையினால் அவர்கள் பொருத்தமான முறையில் பயண அனுமதி மற்றும் ஒழுங்குகளை மேற்கொண்டு நியமனம் வழங்கும் வைபவத்தில் கலந்துகொள்ள முடியவில்லை எனக் கவலை தெரிவித்தனர்.

இலங்கை கல்வியியலாளர் சேவை தரம் IIIஇற்கு உரிய இரண்டாம் கட்ட பட்டியல் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து நியமனம் பெற்றவர்களுக்கான நியமனக் கடிதங்கள் பொருத்தமான முறையில் கிடைப்பதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கல்வி அமைச்சு உயர் அதிகாரி தெரிவித்தார். (50-11)

## தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் பரீட்சை மே 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கொழும்புப் பல்கலைக்கழகம், ரஜரட்டைப் பல்கலைக்கழகம், யாழ்.பல்கலைக்கழக வளாகம் ஆகியவற்றில் தகவல் தொழில்நுட்பமும் தொடர்பாடலும் பட்டக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த யாழ்.மாணவர்களுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை மே 2ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து விண்ணப்பித்த மாணவர்களின் நன்மைகருதி இப்பரீட்சையை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் கடந்த 8ஆம் திகதி கொழும்புப் பல்கலைக் கழகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் கொழும்புப் பல்கலைக் கழக கணனி கல்விப் பிரிவு உதவிப் பதிவாளருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## தமிழ்மொழித் தினச் சுற்றுநிருபம்

2009ஆம் ஆண்டுக்கான [illegible]கில இலங்கை தமிழ்மொழித் தினப் போட்டிகள் 2009க்கான கல்வி அமைச்சின் முழுமையான சுற்றுநிருபம் கிடைக்கப் பெற்றுள்ளது.

தீவக வலயத்தில் பங்குபற்ற இருக்கும் பாடசாலைகளின் அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் தொடர்பு கொண்டு முழுமையான சுற்றுநிருபத்தைப் பார்வையிட முடியும் எனத் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-267)

## பனம்பொருள் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஏப்.22

பனை அபிவிருத்திச் சபை நடத்தும் பனங் கைப்பணிப் பொருள் கண்காட்சியும் விற்பனையும் கொட்டடி சனசமூக நிலையத்தில் நாளை புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வு சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் ஆதரவுடன் சனசமூக நிலையத் தலைவர் இரா.செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக சுவிஸ் நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்குமான முகவர் அமைப்பின் பிரதிநிதி ஹான்ஸ் பீற்றர் எற்றர் கலந்து கொள்வார். (1-7)




## கட்டடத் திறப்பு விழா

சங்கானை,ஏப்.22

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் 'நிக்கொட்' நிறுவனத்தால் 14 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இயக்குநர் றிச்சாட் வோக்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வுக்குப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வித்தியாலய அதிபர் திருமதி ச.யோகேஸ்வரி கேட்டுள்ளார். (1-29)

## வீதி விளக்குகள் ஒளிராததால் மக்களுக்கு அசௌகரியம்

வண்ணை,ஏப்.22

குருநகர், மவுண்கார் மேல் வீதி மின் விளக்குகள் இரவுநேரங்களில் ஒளிர்வதில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் இரவுகளில் திருடர் நடமாட்டம் அதிகரித்து வருவதாகவும் கூறப்படுகின்றது. கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இரவு நேரங்களில் வீடுகளில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, களவாடப்பட்ட சைக்கிள்கள் வெவ்வேறு இடங்களில் அகப்பட்டாலும் திருடர்களைக் கையும் மெய்யுமாகப் பிடிக்கமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (9-160)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலைய தையல் மனையியல் கண்காட்சியில் வெற்றி பெற்றவர் களுக்கான பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.மாவட்டக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி அலோசியஸ் ஜெயராஜன், மாவட்டச் செயலக இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.நடராஜா, ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் [illegible] டியவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவதையும்- யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மாவட் [illegible] பாய் மகளிர் அபிவிருத்தி நிலையத்திற்கான கேடயத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில ஆசிரியர் சங்கக்கிளை அங்குரார்ப்பணம்

அகில இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளையை ஸ்தாபிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அங்கீகாரத்தினை கொழும்பில் உள்ள தலைமைச் செயலகம் ஆங்கில டிப்ளோமா ஆசிரியர் சங்கத்துக்கு வழங்கியுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 ... யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சகல ஆங்கில ஆசிரியர்களையும் கலந்துகொண்டு தங்களை அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

### நீங்காத நினைவில்
## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

வையகத்தில்
24 ★ 10 ★ 1957



விண்ணகத்தில்
25 ★ 04 ★ 2006

### அமரர் இ.து.சிவராசா J.P.
(செயலாளர், பச்சிலைப்பள்ளி, பிரதேச சபை)

அன்பு மொழிபேசி அரவணைத்துக் காத்தெம்மை
பண்புடனே வளர்த்துப் பயன் காணா முன்னர் - நீங்கள்
பரமசிவன் பாதாரம் சென்றதேனோ!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது எம் துயரம்
மீளாத் துயருடனே....

சிவன்வீதி, ஆவரங்கால் மேற்கு, புத்தூர். குடும்பத்தினர். (84635)

## மரண அறிவித்தல்
### மாணிக்கவாசகபிள்ளை கனகசபை



கல்வியங்காடு, முக்குறுணிப் பிள்ளையார் கோயிலடி, புலவனார் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட மாணிக்கவாசகபிள்ளை கனகசபை (ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்) நேற்று (21.04.2009) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்க வாசகபிள்ளை (B.O.L, சென்னை பல்கலைக்கழகம்) - உமையவல்லி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து (ஓதுவார்) - ஞானப்பூங்கோதை தம்பதியரின் பாசமிகு மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் முரளிதரன் (B.Com., இந்தியா), மாதுமை ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிருஷ்ணகுமார் (குயின்ஸ் அரிவு ஆலை), மாலதி (B.Com., - இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும் மாது கிருஷா, உமைஎழிலி, லகுலயா ஆகியோரின் அன்புப் பேரனும் சோமசுந்தரம் (B.Com.,) அவர்களின் உடன்பிறவாச் சகோதரனும் கனகசபை பாலசுந்தரி, சிவகுமார் மதுரவசனி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் திருத்தணிகேசன், வைஷ்ணவி, சண்முகதாஸ், சிவஞானம், ஹம்சத்வனி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2009) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் ஒரு மணியளவில் செம்மணி இந்துமயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முக்குறுணிப்பிள்ளையார் கோயிலடி,
புலவனார் வீதி, கல்வியங்காடு.
0774141772 (84638)

தகவல்:
மருமகன் எம்.கிருஷ்ணகுமார்
(குயின்ஸ் அரிவு ஆலை).

## சமயசந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.22

வட்டுக்கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந் திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.22

அராலி மத்தி உலோலைசிட்டி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.22

மல்லாகம் பழம்பதி திருமுருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வளாகத்தில் அமைந்துள்ள விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

சகல ஆசிரியர்களையும், மாணவர்களையும் தவறாது கலந்து விநாயகரின் அருளைப் பெற்றுக் கொள்ளுமாறு கல்லூரி அதிபர் திருமதி வி.பேரின்பநாதன் கேட்டுள்ளார். (50-9)

## வலிகாமம் வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு மேற்படி கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் மேற்படி உடற்கல்வி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை திட்டமிட்டபடி மெய்வன்மைப் போட்டிகள் நாளை வியாழக் கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (201)

பூவுலகில்: 1943.12.05
விண்ணுலகில்: 2009.03.23

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 23.03.2009 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவன்

அமரர்
### இரத்தினம் குருநாதன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.04.2009) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளன. அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்
### திருமதி கபிரியேல் செல்லாச்சி



மண்டைதீவு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி கபிரியேல் செல்லாச்சி 19.04.2009 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமர் - கனகம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வைத்தி கபிரியேலின் அன்பு மனைவியும் இருதயமலர் (புஷ்பம்), றோசலின் (இன்பம்), யேசுதாசன், மரியதாசன், சூசைதாசன் (பிரான்ஸ்), மேரிதிரேசா (பவளம் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பாக்கியம், பூரணம், வேலுப்பிள்ளை, செல்லம்மா, மங்களம், சின்னையா, சுபத்திரை ஆகியோரின் உடன்பிறந்த சகோதரியும் கற்பநாயகம், செல்லையா, மரிஸ்ரெலா, ஜெசி (கலா), ரஞ்சினி எலிசபெத் (பிரான்ஸ்), அன்ரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் கனிஸ்டா, ஜஸ்ரின் (விஜி), கஸ்ரொன், கலிஸ்ரா, செல்வறோஜி, ஒபீக்கா (சுவிஸ்), ஹொட்பிறீ சுகத் (அல்ஹோபார்), ரதீக்கா, ஜெனிஸ்ரன், ஜெனீபா, றெறன்ஸ், ஜெறன்ஸ் (மலேசியா), ஜெறோம், ஜெனா, பியூலா, சொலன்நதியா (பிரான்ஸ்), ஹெவன் (பிரான்ஸ்), ஒலிவியா (பிரான்ஸ்), ஒஸ்கர் (பிரான்ஸ்), ஆகியோரின் பேர்த்தியும் ஜெபா, ஜெகத், றெபேக்கா, றொசிக்கா, கிருஷாந்தன், லக்ஷிகா, மொபினா, ஜானுகா, ஜாக்கின், எஸ்ரோன், ஜெஸ்மி, ஒஸ்னிசெரோன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'மண்வாசம்'
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
தொ.பே. 077 9649078

தகவல்:
தா.மு.கற்பநாயகம் (மருமகன்)

## அரசாங்க அறிவித்தல்
### மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
### 2009ஆம் ஆண்டுக்கான வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்

மாவட்ட செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 100உம் மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 5000உம் செலுத்துதல் வேண்டும். இச்செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விவரங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தலைவர், மாவட்ட செயலக பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2009ஆம் ஆண்டுக்கான தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான கூறுவிலைகள்" என குறிப்பிட்டு 12.05.2009ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு நேரடியாக செயலக பிரதம கணக்காளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கேள்விகள் அன்றையதினம் மு.ப. 11 மணிக்குத் திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன்போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை 22.04.2009 ஆம் திகதி தொடக்கம் செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்குறிப்பிடப்படும் தளபாடங்களுக்கான மாதிரிகளை/படங்களை செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். மாதிரிக்கொவ்வாத பொருள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

| | |
|---|---|
| 1. மரத்தளபாடங்கள் | அச்சுப்பதிப்பி - சிறிது (Dot metix) |
| கைபிடிக் கதிரை | அச்சுப்பதிப்பி - பெரிது (Dot metix) |
| சாதாரண கதிரை | அச்சுப்பதிப்பி (Lazer Printer) |
| எழுதுநர் மேசை | நிழல்படப்பிரதி இயந்திரம் (Photocopier) |
| பதவி நிலை உத்தியோகத்தர் மேசை | திரையிடு கருவி (Multimedia Projector) |
| கணனி மேசை | மின் சீராக்கி 500 w (Stabilizer 500w) |
| 2. உருக்குத் தளபாடங்கள் | மின் சீராக்கி 1000w (Stabilizer 1000w) |
| உருக்கு அலுமாரி | மின் சீராக்கி 2000w (Stabilizer 2000w) |
| கோவை அலுமாரி | இடையறா மின் வழங்கி (UPS) |
| 3. பிளாஸ்ரிக் தளபாடங்கள் | விசைப்பலகை (Keyboard) |
| பிளாஸ்ரிக் கதிரை | கணனி திரை அலகு எல்.சி.டி (Monitor - LCD) |
| 4. அலுவலக உபகரணங்கள் | தொலைநகல் இயந்திரம் (Fax Machine) |
| வளிபதனாக்கி (Air Conditioner) | Digital Camera |
| கணனி கதிரை (கைபிடியுடன்) | Scanner |
| கணனி கதிரை (கைபிடி இல்லாது) | Mouse |
| மேசை கணனி (Desk Top Computer) | மற்றும் உபகரணங்கள் |
| மடிக் கணனி (Laptop Computer) | |
| இரட்டிப்பு இயந்திரம் (Ronio Machine) | |

க.கணேஷ்,
மாவட்ட செயலர், யாழ்.மாவட்டம்.


# COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Branch : #07, Science Center Road, Kodikamam Rd, Nelliyadi
Phone : 021 2228250 / 0777222422

மாபெரும் புலமைப்பரிசில்திட்டம் – 2009 80%OFF

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office, 3 Months, 1500/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10000~~ 2000/= | Diploma in Web Page Designing, 3 Months, ~~10750~~ 2150/= |
| Diploma in Graphic Designing, 4 Months, ~~10750~~ 2150/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10000~~ 2000/= | Diploma in Auto CAD, 3 Months, ~~10000~~ 2000/= |
| Diploma in Accounting Package, 3 Months, ~~10750~~ 2150/= | Diploma in Computer Science, 4 Months, ~~10750~~ 2150/= | Honors Diploma in Computer Science, 3 Months, ~~13000~~ 2600/= |

50% Off Advance Courses
Dip. in. Multimedia 2750
Dip. in. Video Editing 3250

Computer Express ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்
சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வரையறையற்ற செய்முறைப்பயிற்சி.

May 15 ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.

யாழ்நகரில் ஆரம்பம்
Batch I: 24/04/2009 -9AM -3PM
Batch II: 25/04/2009-9AM
Batch III: 26/04/2009-9AM
Batch IV: 27/04/2009-3PM

நெல்லியடியில் ஆரம்பம்
Batch I: 23/04/2009-10AM
Batch II: 25/04/2009-10AM
Batch III: 26/04/2009-10AM
Batch IV: 28/04/2009-10AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மைச் சூழ்ந்து வரும் ஆபத்துக்கள்

**இன்று ஏப்ரல் 22. உலக பூமி தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

1992இல் ரியோ நகரில் பூமி உச்சி மாநாடு நடைபெற்றது. பூமி மாநாடு முன்பு என்றுமே நடந்திராத நிகழ்ச்சி. வரலாற்றில் முன்பு எப்போதும் விட அதிகமான பல்வேறு நாட் டுத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

உலக சமூகம் எதிர்நோக்கும் பல முக் கிய பிரச்சினைகளின் மீது உலகத்தின் கவனத்தைத் திருப்பியது இம்மாநாடு. உலக வெப் பம் மிகுந்து வருவது பற்றி அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. ''உலகம் சூடாவது'' ''உலக தட்ப வெப்ப நெருக்கடி'' உள்ளிட்ட பிரச்சினைகள் விளக்கப்பட்டன.

தொழிற் புரட்சி விளைந்த தொடக்க காலத்தில் பசுமை இல்ல வாயுவான கரிய அமில வாயுவின் வெளியீடு 10 இலட்சத் திற்கு 280பாகமாக இருந்தது. இன்று 360 பாகமாக ஆகியுள்ளது. 21ஆம் நூற்றாண்டின் பிற்பகுதில் 540 பாகதிலிருந்து 970 பாகம் வரை அதிகரிக்கக் கூடும் என எதிர்வு கூறப் படுகிறது.

வெப்ப நிலை உயர்வால் நாம் கற்பனை செய்யமுடியாத அளவு விளைவுகளை எதிர் கொள்ளப் போகிறோம் என்பது தெளிவாகிறது. இதுபற்றிச் சிந்திப்பதற்கு காரணம் என்ன என்று அறிவது அவசியம்.

பூமியின் சராசரி வெப்ப நிலை அதிகரிப்பினால் முதலில் பாதிக்கப்படுவது தட்ப வெப்ப நிலை ஆகும். கோடை காலம் நீண்டு போவதும், மழை வரத் தாமதமாவதும், கால நிலையில் திடீர் திடீர் என்று மாறுபாடுகள் ஏற் பட்டு வரட்சி, நிலச்சரிவு, கடும் குளிர் என்று இயற்கைப் பேரழிவுகள் ஏற்படுவதற்கும் இந்த சராசரி வெப்ப அதிகரிப்பு (Global Warming) தான் காரணம் என விஞ்ஞானி கள் கண்டு பிடித்துள்ளனர்.

உலக வானியல் நிறுவனமும் ஐ.நா.வும் சேர்ந்து தட்ப வெப்ப மாறுபாடுகளைக் கவனித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகிறது.

அந்த அறிக்கையின்படி 2100 ஆம் ஆண்டின் வெப்ப அதிகரிப்பு 1.4 °C இலிருந்து 5.8 °C வரை இருக்கும் எனவும் 10,000 ஆண்டுக ளாக இல்லாத வகையில் இந்த அதிகரிப்பு ஏற்படும் எனவும் கடல் மட்டம் 10Cm முதல் 90Cm வரை உயரும் எனவும் எங்கும் கொலரா, மலேரியா போன்ற தொற்றுநோய் கள் பரவக்கூடும் எனவும் வெப்ப மண்ட லம், மித வெப்ப மண்டலம் ஆகிவற்றில் பயிர் விளைச்சல் குறைவுபடும் எனவும் வறண்ட பகுதிகளில் பஞ்சம் அடிக்கடி தோன்றும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக வெப்ப அதிகரிப்பினால் ஒவ் வொரு துறைசார் கண்ணோட்டத்தில் விளைவுகளை ஆராய்ச்சியாளர்கள் பட்டியலிட்டு எச்சரிக்கிறார்கள். வெப்ப நிலைக்குக் கட்டுப்பட்டு பல்வேறு மாநாடுகள், ஒப்பந்தங்கள் நாடுகளிடையே மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் திருப்தி கொள்ளும் அளவுக்கு நிலைமைகள் இல்லை.

செல்வி சுரேஷியா சந்திரசேகரம்,
B.A (Hons), Geo.Spl.
ஆசிரியை, நயினாதீவு மகாவித்தியாலயம்.

நாம் வாழ வேண்டுமானால்; எமது எதிர் காலம் பாதிக்கப்படாதிருக்க வேண்டுமா னால்; தலைமுறைகள் கடந்து எதிர்காலம் உறுதிப்பட வேண்டுமானால்; நம்மைச் சூழ்ந்து வரும் ஆபத்துக்கள் குறித்து விழிப் புணர்வு கொள்ளவேண்டும்.

மனித சமூகத்தை நேசிப்பது போல சூழலையும் நாம் நேசிக்க வேண்டும். இன்றைய புவி தினத்தில் ''பூமியின் வெப்பம் கூடுதல்'' என்னும் பிரச்சினை நமது எதிர் கால வாழ்வுக்கு விடுத்துள்ள சவால்....

நம்மைச் சுற்றி என்ன நடக்கிறது என்ப தான சிந்தனையும், விழிப்புணர்வும்தான் நமக் கான சுற்றுச் சூழல் பாதுகாப்புடன் வாழ்க் கையை மீட்டுத்தரும். இயற்கை, சமூகம், மனிதன் பற்றிய நமது தேடல் தொடரட்டும்.

# அதிபர், ஆசிரியர் சேவைத் தரங்களுக்கு மேலாக அதிவிசேட தரம் உருவாக்க நடவடிக்கை

அச்சுவேலி, ஏப்.22

இலங்கை அதிபர் பொதுச் சேவை, இலங்கை ஆசிரியர் பொதுச்சேவை என்பனவற்றில் தற்போதுள்ள சேவைத் தரங்களுக்கு மேலாக அதிவிசேட தரம் ஒன்றை இணைத்துக் கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை என்பது இலங்கை அதிபர் பொதுச்சேவை என்றும் இலங்கை ஆசிரியர் சேவை என்பது இலங்கை ஆசிரியர் பொதுச்சேவை எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டு புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் 01.07.2008 ஆம் திகதியில் இருந்து (கடந்த வருடம் நடுப்பகுதியில்) முன்கூட்டியே நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கை அதிபர் பொதுச்சேவையில் வகுப்பு 3 நீக்கப்பட்டு வகுப்பு 2- II, வகுப்பு 2-I, தரம்- I, அதிவிசேட தரம் என்பன நடைமுறைக்கு கொண்டு வரப்படவுள்ளது. இலங்கை ஆசிரியர் பொதுச்சேவையில் வகுப்பு 3- II, வகுப்பு 3- I, வகுப்பு 2- II, வகுப்பு 2- I, தரம் I என்பனவற்றுக்கு மேலதிகமாக அதிவிசேட தரம் ஒன்று புதிதாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இலங்கை அதிபர் பொதுச்சேவை, இலங்கை ஆசிரியர் பொதுச்சேவை என்று புதிய பெயர் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதையும் ஆசிரியர், அதிபர் தொழிற்சங்கங்கள் ஆட்சேபித்திருப்பதோடு, அதிவிசேட தரத்துக்கு உள்ளீர்ப்பு செய்யப்படவிருப்பவர்கள் சேவை நிலை கடமைப் பொறுப்புக்கள் தொடர்பிலும் தொழிற்சங்கங்கள் தமது ஆட்சேபனைகளை கல்வி அமைச்சின் நேரடிக் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளன.

புதிய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் பொதுச்சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நடைமுறைக்குக் கொண்டுவரப் படவுள்ளன. (50-11)

# மாகாண ஆக்கத்திறன் போட்டிக்கு படைப்பாளிகள் விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஏப்.22

வட மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு தேசிய மரபுரிமைகள் அமைச்சின் அனுசரணையுடன் நடத்தும் ''ஆக்கத் திறன் போட்டி- 2009''இற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

''தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது'' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு ஆக்கத்திறன் போட்டியை நடத்துகின்றது. இந்தப் போட்டிகளுக்கான அனுசரணையை தேசிய மரபுரிமைகள் அமைச்சு வழங்குகின்றது.

தேசத்தின் மரபுரிமை சிறுவர்களுக்கானது என்ற கருப்பொருளில் தேசிய மரபுரிமையையும், அடையாளத்தையும் வெளிக்காட்டும் வகையில் சிறுகதை, கவிதை, குறும்படப்பிரதியாக்கம், கட்டுரை ஆகியவற்றில் போட்டிகளை நடத் துகின்றது.

போட்டிக்கான ஆக்கங்கள் பிரதேச கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலர் ஆகியோரின் உறுதிப்படுத்தலுடன் 30.06.2009 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக உதவிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடக்கு மாகாணம், வரோதயநகர், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

வெற்றி பெறும் படைப்புக்களுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

ஒருவர் வயதுவித்தியாசம் இன்றி எத்தனை போட்டியிலும் பங்கு கொள்ள லாம். போட்டியாளர் வடக்கு மாகாணத்தை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (50-11)

# புதுமாத்தளன் பகுதி மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள்

**'திருப்பதி' கப்பல் மூலம் விநியோகம்**

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பகுதியில் பாதுகாப்பு வலயத்திலுள்ள பொதுமக்களுக்கு திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

திருப்பதி என்ற கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களில் அரிசி, மா, சீனி, பருப்பு, சோயாமீற் போன்ற பொருள்களும் அடங்குகின்றன எனத் திருகோணமலை துறைமுக அதிகாரசபையின் வதிவிட முகாமையாளர் நிமல் ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இந்தப் பொருள்களை கப்பலில் ஏற்றும் நடவடிக்கைகளில் திருகோணமலை துறைமுக ஊழியர்களும் இராணுவத்தினரும் இரண்டு நாள்கள் தொடர்ந்து ஈடுபட்டனர்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் எஸ்.பி.திவாரத்னவின் ஆலோசனைக்கு ஏற்ப அனுமதியுடன் இந்தப் பொருள்கள் முல்லைத்தீவு அரச அதிபரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. (அ-சி)

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் அ.பஞ்சலிங்கம் விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

அருகில் பாடசாலை அதிபர் த.வாமதேவன், கிராம அலுவலர் கே.சிவானந்தன், ஏழாலை தென்னிந்தியத் திருச்சபைப் பங்குத்தந்தை ஜெ.தாவீது அடிகள் ஆகியோர் காணப்படுகின்றனர். (படம்: நேசன்)



ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் வெற்றியீட்டிய இல்லத்தை சேர்ந்த மாணவனொருவனுக்கு யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் வெற்றிக் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம்.அருகில் ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்திரு.ஜே.ஏ.ஜேசுதாஸ் ஆகியோர் காணப்படுகின்றனர். (50-127)



சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் வி.பரந்தாமன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி சியாமளா கந்தசாமி, திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய பிரதி அதிபர் திருமதி கௌரி பரந்தாமன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (50-59)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுபெற்ற அதிபர் செல்வி [illegible] மற்றும் பாடசாலை அதிபர், உபஅதிபர் விருந்தினர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்து வாழ்வதற்கு ஊனம் ஒரு தடையே அல்ல என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் சைக்கிள் திருத்தும் கடை ஒன்றை நடத்தும் நடராசா நகுலேந்திரன். இவரின் இரண்டு கண்களும் பார்வைத் திறனை இழந்துவிட்டன. எனினும் அதற்காக சோம்பி இராது தன்னாலும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுடன் சைக்கிள் திருத்தும் தொழிலைப் பழகி, நீண்ட காலமாக அதனையே செய்துவருகிறார்.
(படமும், தகவலும்: நந்தன்)

# வர்ணப் படங்களின் பதிவுப் பெட்டகம்





படத்தில் நீங்கள் காண்பது லண்டன் மெழுகுச் சிலை அருங்காட்சியகத்தில் உள்ள 'நைட்டிங் கேல்'இன் உருவச்சிலை என நினைத்தால் ஏமாற்றம் தான். விளக்கேந்திய பெருமாட்டி என வர்ணிக்கப்படும் புளோரன்ஸ் நைட்டிங் கேலின் உருவச் சிலையை யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு தத்ரூபமாக வடித்துக் கொடுத்துள்ளார் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரான 'சிற்பக் கலாவிநோதன்' பார்த்தீபன். சிலையையும் அதற்கு உயிர் கொடுத்த சிற்பியையும் படத்தில் காண்கிறீர்கள்..
(படமும், தகவலும்: நந்தன்)



நயினாதீவு செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்துக்கு கோயிலின் உள் வீதியில் ஸ்தாபித்து வழிபடுவதற்காக நயினாதீவில் வாழும் சைவ அடியார்கள் விநாயகப் பெருமானின் முப்பத்தி இரண்டு அவதாரச் சிற்பங்களைத் தனித்தனியாகச் செய்வித்துக் காணிக்கையாக வழங்கியுள்ளனர்.
(படமும் தகவலும்: லக்ஸ்மன்)

தொகுப்பு: ஔண்யன்



என்னடா இது நீரிறைக்கும் இயந்திரத்தைக் காட்டுகிறார்களே என்று எண்ணவேண்டாம். எமது பிரதேசத்தின் வளர்ச்சிக்காக ஓய்வில்லாமல் ஏறக்குறைய 50 வருடங்களுக்கும் மேலாக உழைத்துக் கொண்டிருக்கும் 'ஊசிலி' எனப்படுகின்ற நீரிறைக்கும் இயந்திரங்களில் ஒன்றுதான் இது. ஆழ் கிணற்று நீரைக்கூட அநாயாசமாகப் பாய்ச்சும் தன்மை கொண்ட 'ஊசிலி' இயந்திரங்கள் இங்கிலாந்தில் இருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்டவை. இன்றும் நீரை அள்ளி இறைக்கின்ற இந்த இயந்திரம் வசாவிளான் கிழக்கைச் சேர்ந்த நாகராசா என்பவரிடம் இன்னமும் பத்திரமாக பாவனையில் இருக்கின்றது.
(படமும் தகவலும்: கலைஞன்)



கடல்வாழ் உயிரினங்களில் ஆபத்தானவையும், ஆழமான கடற்பகுதியில் வசிப்பவையுமாகத் திமிங்கிலங்கள் விளங்குகின்றன. மனிதர்களையும், சிறு படகுகளையும் அலாக்காக அப்படியே விழுங்கிவிடும் திமிங்கிலங்கள் ராட்சதத் தோற்றமும் கொண்டவை. எனினும் அண்மைக் காலமாக திமிங்கிலங்கள் கூட்டம், கூட்டமாக கரைகளில் ஒதுங்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இவற்றினை மீளவும் ஆழ்கடலுக்குள் எடுத்துச் சென்று விட்டாலும் இவை திரும்பவும் கரைப் பகுதிக்கு வந்து தமது உயிரை விடுகின்றன. இதனால் திமிங்கிலங்கள் திட்டமிட்டுக் கூட்டம் கூட்டமாக வந்து தற்கொலை செய்து கொள்கின்றன என்ற கருத்து வலுப்பெற்று வருகின்றது. அவ்வாறு தற்கொலை செய் யும் எண்ணத்தோடு அவுஸ்திரேலியாவின் மேற்குப் பக்கக் கடற்கரையோரமாக ஒதுங்கியுள்ள திமிங்கிலக் கூட்டம் ஒன்றைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவுநோய் மன அழுத்தத்துடன் தொடர்புடையது


எஸ்.பேராசிரியன்

மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நீரிழிவு நோய் உருவாகும் சாத்திய ஆபத்து இரட்டிப்பாகிறது என சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

ஆவல், அக்கறையின்மை, உணர்ச்சியின்மை, உடல் பருத்தல் முதலியன மன அழுத்தப் பாதிப்புடன் தொடர்புடைய குணம் குறிகளாகும். இதன் விளைவாக ஆண்களுக்கு நீரிழிவு இரண்டாம் விதம் உருவாகும் சாத்தியம் அதிகரிக்கிறது. இது அவர்கள் தேகப் பயிற்சி செய்யாது சோம்பி இருத்தல், உடல் பருத்தல் போன்ற

## தகவல் பெட்டகம்

நவீன வாழ்க்கை முறையிலும் தங்கியிருக்கிறது.

சுவீடன் தேசத்தில் ''கரோலின்ஸ்க்கா'' நிறுவனம் 2,127மத்திய வயது நபர்களை வைத்து 10 வருடங்களாக ஆய்வு நடத்தியிருந்தது. ஆய்வின் ஆரம்பத்தில் எல்லோர்க்கும் குருதிக்குளுக் கோசு மட்டம் சாதாரணமாக இருந்தது. அவர்களிடம் ஆவல், அக்கறை யின்மை,உணர்ச்சியின்மை போன்ற குண இயல்புகள் பற்றியும் உடல் பருத்தல் பற்றியும் வினாக்கள் கேட்கப்பட்டு விடைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அதிகளவு மன அழுத் தத்துக்குள்ளானவர்கள் மன அழுத்தம் குறைந் தவர்களை விட 2.2 மடங்கு அதிகமாக நீரிழிவு இரண்டாம் வித நோயினால் பீடிக்கப்படும் சாத்தியம் அதிகரித்துக் காணப்பட்டது.

இத்தொடர்பு வயது, உடற்பருமன்சுட்டி, குடும்ப நீரிழிவு நோய் வரலாறு, புகைபிடித்தல், தேகப்பயிற்சிக் குறைபாடு மற்றும் சமூக உறவு முதலிய காரணிகளை உள்ளடக்கிப் பெறப்பட வில்லை. எப்படியாயினும் பெண்களில் இவ் வகைத் தொடர்பு கண்டறியப்படவில்லை. 3100 பெண்களை வைத்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மன அழுத்தத்துக்கும், நீரிழிவு நோய்க்கும் தொடர்பு உள்ளதாக அறியப்படவில்லை. ***



# வெப்பப் பகுதியில் வாழ்ந்தால் பெண் குழந்தை பிறக்கும்



குழந்தைகள் பிறப்பு வீதம் குறித்து அமெரிக்காவில் உள்ள மருத்துவ விஞ்ஞானி கிறிஸ்டன் நாவரா ஆய்வு ஒன்று நடத்தினார். அதில் உலக வெப்ப மயம் அதிகரித்து இருப்பதால் ஆண்கள் உயிர் அணுவில் வீரியத்தன்மை குறைந்து இருப்பதும் ஆண் குழந்தைகளைவிடப் பெண் குழந்தைகள் அதிகமாகப் பிறப்பதும் தெரியவந்தது.

வெப்பம் அதிகமாக உள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கும், வெப்பம் அதிகம் உள்ள இடங்களில் வேலை செய்பவர்களுக்கும் இதேபோன்ற குறைபாடு ஏற்படுகிறது. பூமத்திய ரேகைப் பகுதியில் உள்ள நாடுகளில் வெப்பநிலை எப்போதுமே அதிகமாக இருக்கும். இங்கும் ஆண் குழந்தைகளை விடப் பெண் குழந்தைகளே அதிகமாகப் பிறக்கின்றன.



போர் நடைபெறும் பகுதி களில் சிக்கி இருப்பவர்கள், மன அழுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளோர் ஆகியோருக்கும் பெண் குழந்தைகளே அதிகம் பிறக்கின்றன என்று ஆராய்ச்சிகள் தெரிவிக் கின்றன.

-க.கலையரசன்.

## நம்ப நட...

நல்லவன் என்று
எல்லோரையும் எண்ணாதே!
நல்ல வார்த்தை நாலு சொல்லும்
நாவில் நஞ்சு நாலாயிரமிருக்கும்
"நண்பன்" என வந்து
உன் தோளில் கை போட்டு
உன் பையில் இருப்பதை
தன் கைக்கு எடுத்ததும்
உன்னைத் தூர வைத்து உன் பணத்தில்
தான் தலை நிமிர்ந்து நிற்பான்
இது யதார்த்தம்:
எனவே நீ
நம்பி நடவாதே,
நம்ப நட...

மகேந்திரன் மேனன்,
கொற்றாவத்தை.

மதன் பொய்கை

# கோபம் கொல்லும்



பட்டென எதற்கெடுத்தாலும் கோபப்படும் ஆசாமிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கும் புதிய ஆராய்ச்சி ஒன்றை இங்கிலாந்து மருத்துவ ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ளனர். பெரும்பாலும் மனிதனுடைய கோபம் வெளிப்படும் இடம் குடும்பம் என்றாலும் அது வீடுகளில் வெடிக்கும் வரை உள்ளுக்குள்ளேயே வெகு நேரம் காத்திருக்கிறது.

கோபம் அதிகரிக்கும்போது மனித உடலில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. இதயத் துடிப்பு அதிகரிக் கிறது. குருதி அழுத்தம் கூடுகிறது. பல்வேறு வேதியல் மாற்றங்கள் நிகழ்கின்றன. உடலின் தன்மையே நிலை தடுமாறுகிறது.

நல்ல உடல் நலத்துடன் இருப்பவர்களுக்கு, கோபம் மட்டும் அடிக்கடி வருகிறது என வைத்துக்கொள் வோம். அப்படிப்பட்டவர்களுக்கு மாரடைப்பு வந்து மரணமடையும் வாய்ப்பு 19 விழுக்காடு அதிகரிக்கிறதாம்.

இந்த நல்ல திடகாத்திரம், ஒழுங்கான உடற்பயிற்சி, சத்தான உணவுப் பழக்கம் எல்லாம் இருந்தாலும் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லையெனில் அதோகதிதான் என்பதையே இந்த ஆராய்ச்சி வெளிப்படுத்துகிறது.

கோபப்படும்போது அது உடலில் மன அழுத்தத்தை அதிகரிக்கச் செய்யும்.

'கார்சிசால்' எனும் வேதியல் பொருள் அளவுக்கு அதிகமாகச் சுரந்துவிடுகிறது. இதுவும் மாரடைப்பு வாய்ப்பை அதிகப்படுத்தும் ஒரு காரணி என இதற்கான மருத்துவ விளக்கத்தை எளிமையாய் தெரிவிக்கிறார் ஆராய்ச்சி யின் தலைவர் யோய்சி சிந்தா.

அந்த ஆய்வின் முடிவு, கோபம் இதயத்தின் மின்நிலையில் ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்கி விடுகிறது என நீள்கிறது. இவை மாரடைப்புக்குக் காரணமாகி விடுகின்றன. அமெரிக்காவில் மட்டும் ஆண் டுக்கு 40ஆயிரம் சடுதி மரணங்கள் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போன்ற பெரும்பான்மையான மக்கள் பார்க்கும் விளையாட்டுக்கள் இந்த் நிலையற்ற மின் அதிர்வுச் சிக்கலைப் பலகோடி இதயங்களில் உருவாக்கி விடுகின்றன. இப்படி ஒரு சில தேசங் களை ஒட்டுமொத்தமாக ஒரு இறுக்கமான நிலைக்குள் தள்ளும்போது, மாரடைப்புகள் அதிகரிக்கின்றன என தெரிவிக்கிறார் அமெரிக்க மருத்துவர் லாம்பெர்ட் என்பவர்.

கோபம் உறவுகளைக் கொல்வதுடன், தன்னையும் கொல்லும் என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே விடவேண் டியனவை மது, புகைத்தல் மட்டுமல்ல கோபமும்தான் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். -மதன்.

## புதுப்பிப்பு

பூமி, ஒவ்வொரு தடவையும்
தன் ஆயுளைப்
புதிதாகப்
புதுப்பித்துக் கொள்கின்றது
வன்முறையென்ற...
அநியாய அச்சுக் சுவடத்தில்
நாற்காலி போட்டு
அமர்ந்தபடி...

கா.ரமேஸ்குமார்,
மீசாலை கிழக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.22

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ(சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் " உதயனுக்கு" அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

*ஆங்கிலமொழிமூலம்:* ர.சோபனா 7ஏபிசி, கி.மாதங்கி 6ஏபிசி, ம.காயத்திரி 5ஏ2பி2சி, பா.சண்முகப்பிரியா 4ஏ4பிசி, ஒ.துளசிகா 4ஏபி3சிஎஸ், த.காயத்திரி 3ஏ3பி2சிஎஸ்.

*தமிழ் மொழிமூலம்:* சி.ப்ரீதா 6ஏ3பி, பா.கௌதமி 6ஏபி2சி, ந.ரம்யா 6ஏ2பி, ரா.தாட்சாயினி 5ஏ2பி2சி, வி.விஜேதா 5ஏபி3சி, து.தர்ஷிகா 4ஏ2பி2சி, அ.துளசி 3ஏ5பிசி, ஜெ.கீர்த்தனா 3ஏபி3சி, உ.டுசாளினி 2ஏ4பி2சி, அ.சப்திகா 2ஏ2பி5சி, தே.தாட்சாயினி 2ஏ2பி5சி.

**தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வித்தியாலயம்**

ந.நவநீதன் 3ஏ3பிசி2எஸ், தே.தர்சனா 3ஏ2பி2சி2எஸ், ஜெ.சுலக்ஷன் 3ஏ2சி2எஸ், இ.அகிலரூபன் 2ஏ4பி2சி, ர.ரவீந்திரராணி 2ஏ3பிசி2எஸ், அ.செந்தூரன் ஏ4பி3சி, கோ.ஸ்ரீராம் ஏ4சி 4எஸ், அ.கௌசிகா ஏபி3சி3எஸ், த.நிரோஜினி ஏ2பி4சிஎஸ், அ.அமலா ஏ2பி5சிஎஸ், ப.கலைவாணி ஏபி5சி, சி.நிதுஷா ஏ3சி 3எஸ், சி.தனேஸ் ஏ3சி3எஸ், ம.சடகோபன் ஏ4சி2எஸ், ம.செல்வராஜினி 2பி2சி3எஸ்.

**ஹாட்லிக் கல்லூரி**

*ஆங்கிலமொழி மூலம்:* எஸ்.சுஜீவன் 8ஏசி, எஸ்.அரவிந்த் 7ஏபிசி, டபிள்யூ.பரசுராமன் 6ஏ2பிசி, ரி.நிஷாந்தன் 5ஏ3பிசி

*தமிழ்மொழி மூலம்:* ரி.பார்த்தீபன் 9ஏ, செந்தூரன் 8ஏபி, ஆர்.மோகனரூபன் 8ஏசி, எஸ்.சகிஷ்னா 8ஏசி, ரி.பிரணவன் 8ஏசி, வை.குபில்ராஜ் 7ஏபிசி, ரி.பிரணாளன் 7ஏ2சி, எம். நிஷாந்தன் 7ஏபிஎஸ், ஜே.கிருஷாந்த் 7ஏபிஎஸ், கே.சுஜீவன் 7ஏபிசி, ரி.ரகுராம் 7ஏபிசி, ரி.ஜோதிதரன் 7ஏபிஎஸ், ஜே.ரணீஸ் 6ஏ3பி, கே.மகாராஜ் 6ஏபி2சி, எஸ்.நிரோசன் 6ஏபி2சி, எஸ்.தர்சன் 6ஏ2பி, எஸ்.விதுரன் 6ஏ2பிசி, கே.கஜேந்திரன் 6ஏ2பிசி, எஸ்.பிரசாத் 6ஏ2பிஎஸ், பி.துஷாந்த் 6ஏ2பிஎஸ், வி.முருகதாஸ் 6ஏ2சி, ஏ.பாலமயூரன் 5ஏ2பிசிஎஸ், வி.ஆதுரன் 5ஏ2பிசி, எஸ்.கல்யாண கிருஷ் ணன் 5ஏ2பி, என்.குணதரன் 5ஏபிசி2எஸ், எப்.நிதாபரன் 5ஏ2பிசிஎஸ், கே.குபேந்திரன் 5ஏ2பி2சி, எஸ்.சங்கீதன் 5ஏ3பி, பி.நிதர்சன் 5ஏபி2சி, ஜி.தர்ஷணன் 5ஏ2பிசிஎஸ், எஸ்.பிரணவன் 5ஏ3பிசி, சி.கரிகாலன் 5ஏ2சிஎஸ், எஸ்.பிரதிவிராஜன் 5ஏ3பிஎஸ், எம்.விதூஷணன் 5ஏபி3சி, ரி.ஜாதவன் 5ஏ,3பி,எஸ்.

**வல்வை மகளிர் மகா வித்தியாலயம்**

ஜி.தேன்மொழி 6ஏ2பிசி, எஸ்.சர் மிலா 5ஏ2பிசிஎஸ், கே.தர்ஷிகா 4ஏ3பிசிஎஸ், ஆர்.ரேணுகா 3ஏ2பி3சிஎஸ், ரி.கவி பிரியா 3ஏ்பி4சி, ஆர்.மரியயாழினி 2ஏ2பி3சி 2எஸ், எஸ்.கல்யாணி 3ஏ3பி 3சி, ஏ.கல்யாணி 2ஏ3பிசி3எஸ், எஸ். அஜந்தா ஏ4பி3சிஎஸ், எஸ்.லக்ஸ்மி ஏ2பி2சி4எஸ்.

(9-253)

## மரம் நடுகை

யாழ்ப்பாணம்,ஏப்.22

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பயன்தரும் மரங்களைச் சங்க வளாகத்தில் நாட்டியுள்ளது.

அத்தோடு சங்கப் பணியாளர்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் பயன்தரும் மரங்களும் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (4-224)

## யாழ்.பிரதேச ஓய்வூதியர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஏப்.22

பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் இணைந்து நன்மைகள் பெற விரும்பும் யாழ்.பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஓய்வூதியர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை யாழ்.பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்துக்கு சமுகமளித்து படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு நம்பிக்கை நிதியத்தின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் அறிவித்துள்ளார்.

(50)

## 10 ஆயிரம் நோயாளர்கள் வன்னியிலிருந்து திருமலைக்கு

கொழும்பு,ஏப்.22

''கிரீன் ஓசன்'' கப்பல் மூலம் கடந்த பெப்ரவரி முதல் இதுவரை சுமார் 10ஆயிரம் நோயாளிகள் புலிகளின் பகுதியில் இருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டனர் என செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு தெரிவிக்கின்றது.

கடந்த இரு தினங்களில் புதுமாத்தளன் பகுதியிலிருந்து மேலும் 940 நோயாளிகள் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கப்பல் மூலம் அழைத்துவரப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். இவர்கள் கடந்த 17 ஆம், 18 ஆம் திகதிகளில் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினூடாக திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டனர். இவர்களுடன் நோயாளிகளின் உறவினர்களும் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர்.நோயாளர்கள் உடனடியாக வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். (அ-சி)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சின்னத்தம்பி கந்தையா

பிறப்பு 14-07-1930 இறப்பு 15-04-2007

திதி: திரியோதசி (22.04.2009)

ஐயா!
உங்களின் ஆத்மா சாந்தியடைய வீரபத்திரப்
பெருமானையும் வைரவப் பெருமானையும் வேண்டுகின்றோம்.

புலவனார் வீதி, கல்வியங்காடு. (84632) **குடும்பத்தினர்.**

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 17.03.1944

விண்ணில்: 03.05.2008

திதி: திரயோதசி

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு பின்பு கொக்குவிலில் வசித்தவருமான

### செல்வி இராசம்மா (தேவி) முதலித்தம்பி (அப்பர்)

ஓராண்டு பூர்த்தியாகியும் அவரது நினைவு எங்களது
நெஞ்சங்களில் நீங்காத நினைவலைகளாக திகழ்கிறது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

'செல்வா கொட்',
77, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

மு.இராசேந்திரம் (அன்புச் சகோதரன்),
சி.செல்வராணி,
ஜெ.சிவபாக்கியம். } அன்புச் சகோதரிகள்

## ஓராண்டு நினைவஞ்சலி



மண் மகிழ 17.07.1930

மனம் நெகிழ 03.05.2008

திதி: திரயோதசி (22.04.2009)

### அமரர் சடையர் ஆறுமுகம்

ஓராண்டு சென்றாலும் உம் நினைவை
சிந்தை மறந்திடுமா உணர்வோடு
கலந்திட்ட உயிர் ஓவியமே
இறையடி சேர்ந்திட்ட உம்
ஆத்மசாந்திக்கு இந்நாளில்
நினைந்துருகி எந்நாளும்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (22.04.2009) புதன்கிழமை மு.ப.11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓர் ஆண்டு துயரதினம்



தோற்றம்: 03.12.1937

மறைவு: 22.04.2008

### பிலோமினா குயின்ரஸ் பெனடிற்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கண்ணின் மணிபோன்று நான் வளர்த்து
என் விருப்பப்படி வாழவைத்தேன், என் காவலாளியாக
நீ இருந்தாய், என் விருப்பமே உன் விருப்பம்
என்று இருந்தாய். வவாக்குஞ்சு (ஆசிரியை) என்னை
விட்டு ஓடிவிட்டாய்,
நான் நீ இருக்கிறாய் என்று எண்ணித்
துணிவுடன் இருக்கிறேன்.

என்றும் பாசத்துடன் அக்கா,
இல.10A, கதீற்றல் வீதி, யாழ்ப்பாணம்.

உன்னை விட்டுப் பிரியாமல் நான் இருந்தேன். நீ என்னை விட்டுப் பிரிந்தாய்! நான் துயரத்தில் தவிக்கின்றேன். பிரிவால் வாடி நிற்கின்றேன்.

குயின்ரஸ் பெனடிற் (கணவர் -தென்னாபிரிக்கா).

மம்மி, மம்மி என்று கூப்பிட யாருமில்லை. என் மகனை உனக்குக் காட்ட உன்னைக் கூட்டிப்போக வர மரணித்தாயோ மம்மி. என் மகனைப் பாராது போய் விட்டாயோ மம்மி.

ஒக்டோ பெனடிற் (மகன் -தென்னாபிரிக்கா).

பபாகுஞ்சு மாமி நீங்கள் எங்களோடு வந்து சந்தோசமாக இருப்போம் என்று இருக்க எங்களைவிட்டு திடீரென மறைந்துவிட்டீர்களே மாமி.

பிரியா (மருமகள் -தென்னாபிரிக்கா).

'Gramma என்று ஆசையாகக் கூப்பிட Gramma இல்லையே:

கிரிஸ்ரி (குட்டிப் பேரன்).

அன்ரி என்னை அன்புடன் பிரியமாக வரவேற்று கதைப்பீர்கள். இன்று துக்கத்தில் ஆழ்த்திவிட்டீர்கள்.

Dr.Cy.Knight (மருமகன்).

சிறுபிள்ளைப் பராயத்தில் எம்மோடு அன்பாக, காவலாக இருந்த ஒரேயொரு அன்ரி உங்கள் மரணிப்பை நினைத்து துயருகின்றோம்.

பசில் சேவியர் (USA), Dr.றோகினி Knight (தென்னாபிரிக்கா).

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தையா

காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய வங்காழி வேலுப்பிள்ளை கந்தையா கடந்த (20.04.2009) திங்கட்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கணேசபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களாகிய வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களாகிய செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சித்திரா (U.K), சாந்தி (கனடா), விக்னராஜா (U.K), சண்முகராஜா (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செந்தில்நாதன் (Accountant, U.K), சிறீகாந்தா (Accountant, கனடா), ரட்ணராணி (U.K) , கமலா (U.K) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்றவர்களாகிய பொன்னுத்துரை (A.I), சிதம்பரப்பிள்ளை, நடராசா மற்றும் சிவபாக்கியம் (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களாகிய ரட்ணலிங்கம் (P.W.D.ஓவசியர்), பாக்கியம் மற்றும் கணேசன், Dr.ஆனைமுகன், பராசக்தி, மணி, கங்காதேவி, ஞானேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் குகன் (U.K), கார்த்திகா (கனடா), துளசி (கனடா), பியங்கா (U.K), திலீபன் (U.K), சிந்துஜா (U.K) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

260/3, அரசடி றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

நாகரட்ணம் சகுந்தலா
(ராசாத்தி - பெறாமகள்). (84631)

**காணி தேவை**

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் பிரதான
வீதிகளில் 1 -2 பரப்புக் காணி தேவை.
இடைத்தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 1744581 (84621)

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.

இணையற்ற சேவையினூடு
நிகரற்ற சாதனையாளர்களை
உருவாக்கிய நிறுவனத்தில்

O/L DAY CLASS பகல் நேர வகுப்பு

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அதிபர்.

The Express Institute
Irupalai, Kopay.

**ஆனந்தி திருமணசேவை**
**மணமகன் தேவை**

1976.03.19 இல் பிறந்த சுவாதி 2 ஆம் பாதம், கிரக பாவம் 11 ¼, உயரம் 5'2'' இந்து சமயப் பட்டதாரி ஆசிரியைக்கு அரச/ தனியார் துறையில் சேவையாற்றும் தகுந்த வரன் தேவை. ஏனைய விவரங்கள் நேரில்.
தொடர்பு: V.A. சிவராசா சோதிடர், 56, அம்மன் வீதி, கந்தர்மடம். தொலைத்தொடர்பு 021 222 8708

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ உறவுகளைக் காப்பாற்றுவதற்காக பிரிட்டனில் உயிரைத் துறக்கவும் தயார்!

## லண்டனில் உண்ணாவிரதம் இருக்கும் பரமேஸ்வரன் உதயனுக்குத் தெரிவிப்பு

- லண்டனிலிருந்து தோமஸ் வினோஜன் -

இலங்கையில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி பிரிட்டனில் ஈழத்தமிழர்களால் தொடர்ச் சியாக நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் நேற்று உச்சக் கட்டத்தை அடைந்தன.

நேற்று முன்தினம் அதிகாலை முதல் பிரிட்டன் நாடா ளுமன்றத்துக்கு முன்பாக அணி திரண்ட பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கை அரசு இரசாயன ஆயுதங்களைப் பாவித்து, வன்னியில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களைப் படுகொலை செய்கின்றது என்றும், அதனைப் பிரிட் டன் அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கோஷமெழுப்பினர். பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாமல், அவர்களையும் கூட்டிக்கொண்டு வந்து குடும்பம் குடும்பமாக ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

அங்கு கடந்த 14 நாட்களாக உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டுவரும் பரமேஸ்வரனுக்கு மக்கள் தமது ஒருமித்த ஆதரவை வெளிப் படுத்தினர்.

பரமேஸ்வரன் உண்ணாவிரதம் இருக்கும் பிரதான மேடைக்கு முன்னால் பல இளையோரும் முதியோரும் அடையாள உண்ணாவிரதத்தில் குதித்தனர்.

பிரிட்டனின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அணி அணியாக வந்து குவிந்த மக்களால் நாடாளுமன்றத்துக்கு முன்பாக உள்ள பகுதி நிரம்பி வழிந்தது.

ஈழத் தமிழர்களை இலங்கை அரசிடமிருந்து பாதுகாக்க பிரிட்டன் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. அந்தவேளையில் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

ஈழத்தமிழர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதிகளில் பொலிஸார் நிறுத் தப்பட்டிருந்தனர்.

படுகொலை செய்யப்பட்டுக்கொண்டிருக் கும் தமது உறவுகளின் பிரச்சினைகளுக்குச் சரி யான தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தைக் கை விடப் போவதில்லை என்று ஆர்ப்பாட்டக் காரர்கள் முழக்கமிட்டனர்.



சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ள பரமேஸ்வரன் உடல்களைப் படைந்த நிலையில் மிகவும் சோர்வடைந்திருந்தார்.

பிரிட்டிஷ் எம்.பிக்கள் சிலர் அவ்வப்போது வந்து பரமேஸ்வரனுடனும் அங்கு ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த ஏற்பாட்டாளர்கள் சிலருடனும் பேசிவிட்டுச் சென்றனர்.

பரமேஸ்வரன் தமது உண்ணாவிரதத்தைக் கைவிடவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டனர். எனினும், பரமேஸ்வரன் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றுதற்கு அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்று முன்தினம் காலை 'உதயனுக்குத் தெரிவித்தார். இது ஒரு புறமிருக்க உண்ணாவிரதம் மேற்கொண்டிருக் கும் பரமேஸ் வரன் நேற்றுக்காலை ஏறக்குறைய மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார். வாய் திறந்து பேசு வதற்கு மிகவும் சிரமப்பட்ட அவர், யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, ஈழத்து உறவுகள் பாது காக்கப்படும்வரை தமது போராட் டம் தொடரும் என்று உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

"யுத்தத்தை நிறுத்தி எமது மக்களைப் பாது காக்கவேண்டும் என்ற நோக்கத்துக்காகவே நான் போராட்டத் தைத் தொடர்கிறேன். பிரிட்டன் அரசு அதற்கு நட வடிக்கை எடுக்கத் தவறினால் - ஈழத்தில் எமது உறவுகளின் படுகொலைகள் தொடர்ந்தால் - இங்கு எனது உயிரை விடவும் தயாராக இருக் கிறேன்" - என்று கூறினார் பரமேஸ்வரன்.

"எனது மக்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகவே நான் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற் கொள்கிறேன். என்னை எவரும் கட்டாயப்படுத்தவில்லை. யாருடைய தூண்டுதலின் பேரிலும் நான் போராட்டத்தைத் தொடங்கவில்லை. மாணவர்களின் ஆதரவுடன் தான் போராடத் தொடங்கினேன். எமது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட எமது மக்களும் என்னோடு சேர்ந்து போராடுகின் றார்கள். இந்த நிலையில், எனது இந்தப் போராட் டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் - இதற்கு அவதூறு ஏற்படுத் தும் விதத்திலும் சிலர் கருத்துத் தெரிவிப்பது எனக்கு வேதனைய ளிக்கிறது" - என்றும் பரமேஸ்வரன் தெரிவித்தார்.

தொடர்ந்து தம்மோடு இணைந்து போராட பிரிட்டனில் உள்ள ஈழத் தமிழ் உறவுகள் முன் வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் - பரமேஸ்வரனின் உடல் நிலை தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொண் டிருக்கும் மருத்துவரான டாக்டர் பிரான்ஸிஸ் என்பவரைத் தொடர்பு கொண்டு நிலைமைகள் தொடர்பாகக் கேட்டோம்.

அவர், பரமேஸ்வரனின் உடல்நிலை குறித்தும், அவருக்கு ஆதரவாகக் கூடியிருக்கின்ற மக்களின் உணர்வுகள் பற்றியும் உதயனுடன் பகிர்ந்துகொண்டார்.

"14 நாட்களாக சிறிதளவு தண்ணீரை மட்டுமே குடித்துக்கொண்டு பரமேஸ்வரன் இந்தப் போராட் டத்தை மேற்கொண்டிருக்கிறார். அவரது உடல் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்துகொண்டே போகின்றது. அவர் இப்போது அபாயக் கட்டத்தில் தான் இருக்கின்றார். இன்று [அதாவது நேற்று] நல்லதொரு முடிவை பிரிட்டிஷ் அரசு எங்களுக் குச் சொல்லும் என்று எதிர்பார்க்கிறோம்" - என்று அவர் தெரிவித்தார்.

"பரமேஸ்வரனுக்கு ஆதரவாகவும் தமது உறவுகளைப் பாதுகாப்பதற்காகவும் இங்குள்ள மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து தமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். எம்மைச் சுற்றிப் பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கின்றனர். எப்போது என்ன நடக்குமோ என்ற நிலைதான் இங்கு காணப்படுகிறது. இருந்தாலும் ஈழத்தில் பல்வேறு இன்னல்களை அனுபவித்துக்கொண் டிருக்கும் தமிழ் மக்களுக்காக எங்களால் செய்யக் கூடிய உதவி இதுதான்" - என்று கூறி வேதனைப்பட் டார் டாக்டர் பிரான்ஸிஸ்.

வன்னியில் ஒரு பெரும் மனித அவலம் ஆரம் பிக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி நேற்று மாலையில் அங்கு பரவியது. லண்டனில் பரமேஸ் வரனின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்கவென கூடியிருந்த மக்கள் வன்னியின் செய்தியை அறிந் ததும் சொல்லொணாத் துயரடைந்ததோடு பிரித்தானிய அரசு இவ் அழிவைத் தடுக்க தனக்கே உண்டான முழுப்பலத்தையும் பிரயோ கிக்க வேண்டுமெனக் கூறி, வீதி மறியலில் இறங் கினர். இதனால், லண்டனின் மையப்பகுதி போக் குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வன்னியின் செய்திகேட்டு கண்ணீர் விட்டு அழும் மக்கள் லண்டனில் உள்ள அனைத்துத் தமிழர்களையும் [illegible] தம்மோடு இணையுமாறு அழைத்தனர். [illegible] நன்கு உணர்ந்த பொலிஸார், ஒருவகை மென்போக்கையே கடைப்பிடிக்கின்றனர். கலகமடக்கும் பொலிஸ் அணியினர் அழைக்கப்படவில்லை.

# யாழ்.மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாகியுள்ள 24 மணிநேர அவசர அம்புலன்ஸ் சேவை

யாழ்.மாவட்டத்தில் மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் கடந்த பெப்ரவரி முதல் அவசர அம்புலன்ஸ் சேவை நடத்தப்பட்டு வருகின்றது. அவசர நோய் நிலைகளின் போது மக்கள் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்வதற்கு இச் சேவை பயன்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 2008 ஒகஸ்ட் மாதம் முதல் இரவு நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால் இரவு வேளைகளில் மக்கள் அவசர நோய்களுக்கு சிகிச்சைபெற வைத்தியசாலைகளுக்கு செல்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கினர். வீட்டுப் பிரசவங்களின் எண்ணிக்கை அதிகரித்தன. எனவே மக்களின் தேவையை உணர்ந்து பலரது வேண்டுகோளுக்கிணங்க இரவு நேர அம்புலன்ஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது. இரவு வேளைகளில் ஊரடங்கு நேரத்தில் அவசர நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல இச்சேவை பெரிதும் உதவியது. இச்சேவையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆகியன பங்கெடுத்தன. இச்சேவை யாழ்.மாவட்ட மக்களுக்குப் பெரும் வரப்பிரசாதமாக இருந்ததை நாம் அவதானித் தோம்.

அண்மையில் மத்திய சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாவட்டங்களில் Medical Team International என்ற நிறுவனத்தின் உதவியுடன் விபத்தில் காயமடையும் நோயாளர்களுக்கான அவசர அம்புலன்ஸ் சேவை ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. எனவே எமது 2 வருட இரவு நேர அம்புலன்ஸ் சேவை அனுபவத்தை மையமாகக் கொண்டு Medical Team International நிறுவனத்தின் உதவியுடன் 24 மணிநேர அம்புலன்ஸ் சேவையை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

### சேவைப் பெறும் முறை

அவசரமான மருத்துவ நிலைகளின் போது யாழ்.மாவட்டத்தின் எப்பிரதேசத்திலிருந்தும் 24 மணிநேரமும் எந்தவித தொலைபேசி மூலமும் (SLT Landlines/CDMA/Mobile Phones) "110" என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இந்த அழைப்புக்களைப் பெற்றுக் கொள்ள யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அமைந்துள்ள அவசர அழைப்பு நிலையத்தில் 24 மணிநேரமும் இணைப்பாளர்கள் காத்திருப்பார்கள். அவர்கள் அழைக்கும் நோயாளியின் வதிவிடத்திற்கு அண்மையிலுள்ள வைத்தியசாலையை தொடர்பு கொண்டு அம்புலன்ஸை அனுப்பிவைப்பர்.

முன்னைய இரவுநேர அம்புலன்ஸ் சேவை நடைமுறையில் மக்கள் தமது அருகிலுள்ள வைத்தியசாலைகளை நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டும். இதற்காக அவர்கள் பல வைத்தியசாலைகளில் தொலைபேசி இலக்கங்களை மனதில் வைத்திருக்க வேண்டும். இது மக்களுக்கு மிகவும் சிரமமானது. எனவேதான் மக்கள் மனதில் இலகுவாக பதியக்கூடிய ஓர் எளிமையான இலக்கம் 110 தெரிவு செய்யப்பட்டது இதுவே கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாவட்டங்களிலும் அவசர அம்புலன்ஸ் சேவை தொலைபேசி இலக்கமாக பாவிக்கப்பட்டு வருகின்றது.




### சேவை வலைப்பின்னல்

இச்சேவை வலைப்பின்னலில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும் 18 வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் நோயாளிக்கு இயன்றளவு துரிதமாக சேவையை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் மருத்துவப் பணியாளர்களுக்கு அவசர மருத்துவ முதலுதவி பற்றியும் நோயாளர்களைப் பத்திரமாக அம்புலன்ஸில் கொண்டு செல்வது பற்றியும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள், அம்புலன்ஸ் சாரதிகள், பரிசாரகர்கள் ஆகியோருக்கும் முதலாம் மட்ட (level 1) பயிற்சிகள் நிறைவுபெற்று இரண்டாம் மட்ட (level 2) பயிற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. பயிற்சியின் பின்னர் ஒவ்வொரு வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிக்கும் தேவையான அடிப்படை முதலுதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. [illegible] அம்புலன்ஸ் [illegible] சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

இவ்வருடம் 11.02.2009 இல் இச்சேவை ஆரம்பிக்கப்பட்ட பின் வழங்கிய சேவைகள்.

★மாசி மாதம் [11.02.2009- 28.02. 2009] 37 அழைப்புக்கள்.

★மார்ச் மாதம் [01.03.2009- 31. 03.2009] 228 அழைப்புக்கள்.

★ஏப்ரல் மாதம் [01.04. 2009-15. 04. 2009] 124 அழைப்புக்கள்.

மார்ச் மாதம் வழங்கப்பட்ட சேவைகள் [கட்டண அறவீட்டின்படி]

★கட்டணம் அறவிடப்பட்டது -175 அழைப்புக்கள் [77%]

★இலவச சேவை - 53 அழைப்புக்கள் [23%]

இப்புள்ளி விவரங்கள் யாவும் 110 தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளின் எண்ணிக்கையே. மேலும் பழைய இரவுநேர அம்புலன்ஸ் சேவை வழக்கப்படி இன்னமும் பலர் நேரடியாக வைத்தியசாலைகளைத் தொடர்பு கொண்டு அம்புலன்ஸ் சேவைகளைப் பெற்று வருகின்றனர். அந்த விபரங்கள் இந்த புள்ளி விவரங்களில் உள்ளடக்கப்படவில்லை.

எனவே சராசரியாக தினசரி 7-8 நோயாளர்கள் இச் சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

### நிதி மூலம்

வைத்தியசாலைகளுக்குக்கிடையிலான சாதாரண அம்புலன்ஸ் சேவையை நடத்தவே எமக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருளுக்கான நிதி ஒதுக்கீடு போதுமானதல்ல. இந்நிலையில் நோயாளி அழைத்த இடத்திற்குச் சென்று அவரை அழைத்து வருவதென்பது இன்றைய பொருளாதார சூழ்நிலையில் இலவசமாக நடத்துவதென்பது சாத்தியமானதல்ல. ஒருபுறம் மக்களுக்கு இச்சேவை வழங்கப்பட வேண்டியதன் தேவை உணரப்படுகின்றது. மறுபுறம் பொருளாதார ரீதியாக சாதகமற்ற சூழ்நிலை இவை இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்தே ஒரு குறைந்த நியாயமான கட்டணத்துடன் [300 ரூபா] இச்சேவையை ஆரம்பிப்பதென தீர்மானிக்கப்பட்டு திணைக்கள உயரதிகாரகளின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் சுகாதாரத் திணைக்கத்திற்கு ஓர் நிதி நெருக்கடியை ஏற்படுத்தித் இத்திட்டத்தை இடைநடுவில் கைவிட நாம் விரும்பவில்லை. இத்திட்டம் நீடித்து நிலைத்து நின்று மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென் [illegible]கோள்.

[illegible] நாம் பின்வரும் சந்தர்ப்பங்களில் இச்சேவையை இலவசமாகவே நடத்தி வருகின்றோம்.

★நலன்புரி நிலையங்களிலிருந்து நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல.

★வீதி விபத்துக்களில் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல.

★வைத்தியசாலைகளுக்கு அன்புலன்ஸில் எடுத்து வரப்படும் நோயாளி வழியில் இறக்க நேரிட்டால்.

★வறுமைக் கோட்டின் கீழ் வாடும் நோயாளர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல.

எனவே சமூகத்தில் கஷ்டப்பட்ட, பாதிக்கப்பட்ட மக்களும் இச்சேவையை பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

### எதிர்கொள்ளும் சவால்கள்

★இச்சேவையைச் சிறப்பாக நடத்த எம்மிடம் தற்போதுள்ள அம்புலன்ஸ் வண்டிகள்போதாது மேலும் அம்புலன்ஸ் வண்டிகள் தேவைப்படுகின்றன.

★அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை.

★ மருத் துவ உபகரணங்களின் பற்றாக்குறை

★மருத்துவ பணியாளர்களுக்கான பயிற்சி மேலும் விஸ்தரிக்கப்பட வேண்டும்

### பொதுமக்களுக்கு ஓர் வேண்டுகோள்

சில சந்தர்ப்பங்களில் சிலர் அவசரமில்லாத நோய்நிலைகளுக்கு இச்சேவையை அழைக்கின்றனர். அதனால் உண்மையான சேவை தேவைப்படும் அவசர நோயாளிக்கு நாம் சேவை வழங்க முடியாதுள்ளது. எம்மிடம் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான அம்புலன்ஸ் வண்டிகளே உள்ளன. இவை வைத்தியசாலைகளுக்கிடையிலான சேவைகளையும் மேற்கொள்ள வேண்டும். எனவே அதனை மனதிற்கொண்டு அவசர நோய்நிலைகளிற்கு மட்டும் இச் சேவையை அழைத்து ஒத்துழைப்பு வழங்கும்படி பொதுமக்களை வேண்டுகின்றோம்.

இத்திட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் திட்டமிடல் பிரிவினால் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன் தலைமையில் ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தை மேம்படுத்தி சிறப்பாக நடத்துவது சம்மந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

### வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவுகள்

இச்சேவையின் தொடர்ச்சியாக அவசர மருத்துவ சிகிச்சையை மேம்படுத்தும் நோக்கில் சிறிய வைத்தியசாலை முதல் பெரிய வைத்தியசாலைகள் வரை சிறிய அளவிலான அவசர சிகிச்சைப் பிரிவுகளை நிறுவி வருகிறோம். மேலும் மருத்துவ உபகரணங்களையும், மருத்துவப் பணியாளர்களுக்கான பயிற்சிகளையும் வழங்கி இவற்றைப் படிப்படியாக மேம்படுத்தி வருகிறோம். இதன் மூலம் எதிர்காலத்தில் இம் மாவட்ட மக்களுக்கு சிறந்த அவசர சிகிச்சை சேவைகளை வழங்க முடியுமென எதிர்பார்க்கின்றோம்.

## மிக அவசரமான தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்துமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள்

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
**பிராந்திய சுகாதார சேவைகள்பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்தோருக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஏப்.22

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுயதொழில் உதவி கோரி விண்ணப்பித்த 12 பேருக்குரிய கொடுப்பனவும், தற்செயல் நிவாரணம் கோரி விண்ணப்பித்த ஒருவருக்குரிய கொடுப்பனவும் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

பின்வரும் பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் நாளை வியாழக்கிழமை பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித் துள்ளார்.

மாகாண நலத்துறைத் திணைக்களத்தினால் கெற்பேலி மேற்கைச் சேர்ந்த ஆ.நடராசா என்பருககு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவையும் சி.தவமலர் மீசாலை மேற்கு, ச.சாந்தி மீசாலை வடக்கு, க.புவனேஸ்வரி, ஐயனார் கோவிலடி, கொடிகாமம், இ.இராஜேஸ்வரி கோயிலமனை, கொடிகாமம், பா.உமாதேவி, கண்டி வீதி, சாவகச்சேரி, வ.ஞானலட்சுமி, சரசாலை வடக்கு, வே.வள்ளிநாயகி தாவளை- இயற்றாலை, ந.சாந்தினி உதயசூரியன் வீதி, சாவகச்சேரி, வ.கதிரவேலு கைதடி தெற்கு, ந.நாகம்மா மட்டுவில் தெற்கு, கோ.முத்துப் பிள்ளை கச்சாய் வீதி, கொடிகாமம் ஆகியோருக்கு சுயதொழில் உதவிக் கொடுப்பனவு வழங்கியுள்ளது.

இதேவேளை சமூக நலத்துறை அமைச்சு காளி கோவில் வீதி, மீசாலை மேற்கைச் சேர்ந்த இ.துரைராஜா என்பவருக்கும் சுயதொழில் உதவிக் கொடுப்பனவை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

(04-207)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.கல்வி வலய பாடசாலைகளில் மனைப் பொருளியல் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையில் நடைபெறுமென்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் அறிவித்துள்ளார்.

(50-9)

# கொக்குவில் இந்து தரம் 11 மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2009 ஆம் ஆண்டு தரம் 11 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், சகல ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேற்படி கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (201)

# தொண்டர் ஆசிரியர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்குப் புதிய உயர்கல்லூரியில் தொண்டர் ஆசியர்களுக்கு அவசர கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் நியமனத்தை விரைவுபடுத்தும் முகமாக ஆராயப்படவுள்ளதால் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்-கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.22

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் சகல அதிபர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப் பாளர் அ.வேத நாயகம் அறிவித்துள் ளார் (201)

# சரசாலை பொது நூலகத்தில் அறிவை மேம்படுத்தும் திட்டம்

சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் இயங்கும் சரசாலைப் பொது நூலகத்தில் மாணவ அங்கத்தவர்களின் பொது அறிவை மேம்படுத்தும் நோக்கில் அறிவை மேம்படுத்தும் செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டதின் கீழ் நடத்தப்பட்ட முதலாவது பரீட்சையில் மட்டுவிலைச் சேர்ந்த செல்வி செ.நிரோசா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இதேவேளை இரண்டாவது பரீட்சை மே 10 ஆம் திகதி நடைபெறும் என்று நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (207-59)

# தாண்டிக்குளம் வரை மீண்டும் ரயில் சேவை

யாழ்தேவி ரயில் சேவை இருபது வருட இடைவெளிக்குப் பின்னர் முதற் தடவையாக வவுனியாவுக்கு அப்பால் இடம்பெறவுள்ளது. இதன் முதற் கட்டமாக வவுனியாவைக் கடந்து தாண்டிக்குளம் வரை இந்த ரயில் சேவை நடைபெற வுள்ளது.

அதன்படி யாழ்தேவி ரயில் சேவை நாளை மறுதினம் முதல் தாண்டிக்குளம் வரை இடம்பெறவுள்ளதாக போக்குவரத்து அமைச்சுத் தெரிவித்தது.

இதேவைளை யாழ்ப்பாணத்துக்கான யாழ்தேவி ரயில் சேவையை வெகுவிரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

# கிழக்கு மாகாணத்தில் ஈ.பி.டி.பி.கட்சி மீது களங்கம் ஏற்படுத்த சில தீய சக்திகள் முயற்சி

## அந்தக் கட்சியின் அறிக்கையில் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.22

கிழக்கு மாகாணத்தில் ஈ.பி.டி.பி. கட்சி மீது களங்கம் ஏற்படுத்தும் நடவடிக்கையில் சில தீய சக்திகள் ஈடுபட்டுள்ளதாக அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-


கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாகத் தொடருகின்ற படுகொலைகள், கொள்ளைகளை நாம் தொடர்ந்து கண்டித்து வந்துள்ளோம். இத்தகைய நடவடிக்கைகள் தடுக்கப்பட்டு எமது மக்களின் பாதுகாப்பும், அமைதியான வாழ்வும் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்த நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இரவு வேளைகளில் தற்போது கொள்ளைச் சம்பவங்களும், மிரட்டல் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. அவ்வாறான மக்கள் விரோத, சட்ட விரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் எமது பெயரைக் கூறி கொள்ளையில் ஈடுபட்டிருப்பதாக எமது மக்கள் கூறுகின்றனர்.

ஈ.பி.டி.பியின் மக்கள் நலன்சார்ந்த நடவடிக்கைகளை எமது மக்கள் நன்கு அறிவார்கள். எமக்கு கொலை, கொள்ளை, மிரட்டல்களில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை. அத்தகைய செயற்பாட்டில் எவர் ஈடுபடுவதையும் கட்சி ஏற்றுக்கொள்ளாது. அத்தகையவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் காவல்துறையினரின் கூடுதல் அக்கறையை ஈ.பி.டி.பி.எதிர்பார்க்கிறது. யாழ்ப்பாணத்திலும் இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபட்ட சமூக விரோதிகளை மக்களின் பங்களிப்போடு சட்டத்திற்கு முன்னால் நிறுத்தியுள்ளோம். அதுபோல் கிழக்கு மாகாணத்திலும் மக்களின் துணிச்சலான பங்களிப்பும் விழிப்புணர்வும் இருந்தால் இத்தகைய மக்கள் விரோத சக்திகளை இனங்காட்டவும் சட்டத்திற்கு முன்னால் நிறுத்தி தண்டனை பெற்றுக் கொடுக்கவும் எம்மால் முடியும்.

ஈ.பி.டி.பியினராகிய நாம் மக்களின் நலன் சார்ந்ததும், அபிவிருத்தியுடன் தொடர்பு பட்டதுமான பணிகளை நடைமுறைச்சாத் தியமான வகையில் முன்னெடுத்து வருகின்றோம். இந்த வேளையில் எம்மீது சேறு பூசும் செயற்பாடுகளை சில தீய சக்திகள் திட்டமிட்டுச் செய்துவருவதாகவே நாம் கருதுகின்றோம் - என்றுள்ளது.

எனவே எமது அன்புக்குரிய மக்கள் தீய சக்திகள் தொடர்பில் கூடுதல் விழிப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்- என்றுள்ளது.




# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஏப்.22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாக நடைபெறவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளும் வலிகாமம் கல்வி வலயக் பாடசாலைகளை உரிய நேரத்திற்கு சமுகம் தரும்படி வலிகாமம் கல்வி வலயஉடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (50-86)

* * *

வலி.வடக்கு,ஏப்.22

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான் மெய்வல்லுநர் போட்டிகள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைவாக நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக் கிழமையும் காலை 8 மணிமுதல் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒழுங்கின் பிரகாரம் போட்டிகள் நடைபெறவுள்ளதால் வலிகமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த போட்டிகளில் பங்குபற்றும் அனைத்துப் பாடசாலைகளையும் குறிப்பிட்ட நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் தரும்படி வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் மு.நடராசா அறிவித்துள்ளார். (50-86)

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துரதி குணரத்தினம் (பேபி)



தம்மளை, கந்தரோடை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துரதி குணரத்தினம் நேற்று (21.04.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை -நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற குணரத்தினத்தின் அன்பு மனைவியும் திருவருட்செல்வனின் அன்புத் தாயும் ஜெயந்தினியின் அன்பு மாமியும் கோபிராஜா, கோகிலன், தபோஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற குலசேகரம் மற்றும் மகேஸ்வரி, அன்னலட்சுமி, அல்லிராணி, சிரோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பரிமளம், துரைராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2009) புதன்கிழமை மு.ப.11.30 மணியளவில் கந்தரோடை மேற்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கம்புலவு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்மளை,
கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

தகவல்: கு.திருவருட்செல்வன் (மகன்)
உரிமையாளர் (கோபிராஜா ரான்ஸ்போட்)
தொ.பே: 0602213643, 0602218901, 0773638459.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்துக்கு எதிரான ஜெனிவா மாநாட்டில் ஈரான் நாட்டு ஜனாதிபதியின் உரையால் சர்ச்சை

நியூயோர்க், ஏப். 22

ஜெனிவாவில் ஆரம்பமான ஐ.நா. சபையின் இனவாதத்துக்கு எதிரான மாநாட்டில் ஈரானிய ஜனாதிபதி அஹ்மதிநிஜாத் ஆற்றிய உரை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு பல பிரதிநிதிகள் ஆட்சேபம் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்கள்.

ஈரானிய ஜனாதிபதி மாநாட்டு மேடைக்கு வந்த ஒரு சில நிமிடங்களுக்குள்ளேயே இஸ்ரேலை தாக்கிப் பேசியதன் மூலம் பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டார். இதனால் மாநாட்டில் சலசலப்பு ஏற்பட்டது.

''இது இனவாதத்துக்கு எதிரான ஒரு மாநாடு. இஸ்ரேலும் முற்றும் முழுதாக இந்த இனவாதத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டு கட்டி எழுப்பப்பட்டுள்ளது. எழுப்பப்பட்டு வருகிறது'' என அஹ்மதி நிஜாத் தம் உரையில் சுட்டிக்காட்டினார்.

''யூதர்கள் தண்டிக்கப்பட்டார்கள்; இனப்படுகொலை செய்யப்பட்டார்கள் என்பவற்றைக் காரணங்காட்டி, ஒரு நாட்டை ஆக்கிரமித்து, அங்கு இனவாத நாடு ஒன்றை இஸ்ரேலியர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அதுவே இஸ்ரேல். இது இனவாதமில்லையா?'' என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

அஹ்மதிநிஜாத்தின் உரை அவரின் ஆதரவாளர்களுக்கு உற்சாகமளிப்பதாய் இருந்தது. அவர்கள் இனவாதிகளுககு எதிராகக் கோஷமெழுப்பினார்கள். இதையடுத்து, அவர்கள் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்கள்.

பெருந்தொகையான பிரதிநிதிகள் ஈரானிய ஜனாதிபதியின் உரைக்கு ஆட்சேபனை தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்கள். அதேவேளை, மற்றும் பல பிரதிநிதிகளின் கரகோஷங்களுக்கிடையே அவரின் உரை தொடர்ந்தது. சொற்பொழிவு ஆரம்பமான சில நிமிடங்களுக்குள்ளேயே, ஏறத்தாழ 30 நாடுகளின் பிரதிநிதிகள் வெளியேறி விட்டார்கள்.

அஹ்மதிநிஜாத் தொடர்ந்து பேசுகையில், ''இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின்னர், ஐரோப்பாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் யூத குடியேற்றவாசிகள் மத்திய கிழக்குக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன மண்ணில், இனவாத அரசொன்றை அமைப்பதற்காக எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையே இதுவாகும்'' எனக் குறிப்பிட்டார்.

''ஐரோப்பியர் தங்களின் இனவாதத்தின் பயங்கர விளைவுகளுக்கு நஷ்டஈடாக பலஸ்தீன பூமியில், குரூரமான இனவாத அடக்குமுறையாளர்கள் தங்கள் ஆட்சியைக் கட்டியெழுப்ப உதவியுள்ளார்கள்'' என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

பிரான்ஸ் தூதுவர் ஜேன்-பெப்டிஸ்ட்டி மெட்டி, இவ்வுரை தொடர்பாக ஏ.பி. செய்தி நிறுவனத்திற்குக் குறிப்பிடுகையில், ''ஈரானிய ஜனாதிபதி எடுத்த எடுப்பிலேயே யூதர்களைப் பற்றியும், இஸ்ரேலைப் பற்றியும் கேள்வியெழுப்பத் தொடங்கி விட்டார். அதனால், இனியும் மாநாட்டு மண்டபத்தில் நாம் இருப்பதற்குக் காரணம் கிடையாது என எண்ணிவிட்டேன். அதனால் வெளி நடப்பு செய்தேன்'' என்றார்.

ஈரானிய ஜனாதிபதி அஹ்மதிநிஜாத் இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கு ஏற்கனவே ஆட்சேபனை தெரிவித்து, அமெரிக்கா, இஸ்ரேல், கனடா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து, போலாந்து, நியூ ஸிலாந்து ஆகிய நாடுகள் மாநாட்டை பகிஷ்கரித்திருந்தன.



அஹ்மதிநிஜாத் இம்மாநாட்டை அடுத்து, பத்திரிகையாளர் மாநாடொன்றிலும் ஈரானின் நிலைப்பாடு குறித்துப் பேசினார். அவர் தம் உரையில், ''பல நாடுகள் இனவாதத்துக்கு எதிரான ஐ.நா.மாநாட்டை பகிஷ்கரித்துள்ளன. இது அந்நாடுகளின் கர்வத்தையும் சுயநல போக்கையுமே பிரதிபலிக்கின்றது'' என்றார்.

## மேபியா இயக்கத்தினர் குடியிருப்பாளர் மோதல்

நைரோபி, ஏப். 22

மத்திய கென்னிய நகரான கராட்டினாவில் குடியிருப்பாளர்களுக்கும், முங்கி இன தீவிரவாத அமைப்பின் உறுப்பினர்களுக்குமிடையே மூண்ட சண்டையில் 24 பேர் கொல்லப்பட்டனர். முங்கிகி இன தீவிரவாத அமைப்பே மேபியா இயக்கம் என அழைக்கப்படுகிறது.

மேபியா தீவிரவாத அமைப்பு ஏற்கனவே தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், இதன் உறுப்பினர்கள், உள்ளூர் வாசிகளை மிரட்டி பணம் பறித்து வருகிறார்கள். குடியிருப்பாளர்கள் தற்போது இவர்களுக்கு எதிராக சண்டையிட துணிந்து விட்டார்கள் என பொலிஸ் பேச்சாளர் சார்ள்ஸ் ஒவினோ குறிப்பிட்டார்.

## மும்பையில் தாக்குதலை மேற்கொண்டோர் ஆளுநர் மாளிகையையும் தாக்கத் திட்டமாம்

மும்பை, ஏப். 22

மும்பையில் பயங்கரவாதத் தாக்குதல் நடந்தபோது கசாப்பும், இஸ்மாயில் கானும் ஆளுநர் மாளிகையைத் தாக்கவும் திட்டமிட்டிருந்தனர் என அரச சட்டத்தரணி விசாரணையின் போது குற்றஞ்சாட்டியுள்ளார்.

உலக அரங்கில்

மும்பைத் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணை மும்பை சிறப்பு நீதிமன்றத்தில் திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது அரசுத் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி உஜ்வால் நிகாம் பின்வருமாறு குறிப்பிட்டார்:-

''மும்பைத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட தீவிரவாதி இஸ்மாயில் கானின் பையிலிருந்து மும்பை நகரின் வரைபடம் ஒன்று கைப்பற்றப்பட்டது. அதில் ஆளுநர் மாளிகையைக் குறிப்பிட்டு அதற்குச் செல்லும் வழியும்சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

''இதன்படி கசாப்பும், இஸ்மாயிலும் காரைத்திருடிக் கொண்டு ஆளுநர் மாளிகை நோக்கிச் சென்றனர். ஆனால், வழியில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் இஸ்மாயில் கொல்லப்பட்டார். கசாப் மட்டும் உயிருடன் பிடிபட்டார்.

''இதிலிருந்து அவர்கள் ஆளுநர் மாளிகையைத் தாக்கத் திட்டமிட்டிருந்தமை உறுதியாகிறது.'' இவ்வாறு அவர் கூறினார்.

வழக்கு விசாரணையின் போது தீவிரவாதி கசாப் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது அவர் நீதிபதியிடம் ''அனைவரும் ஆங்கிலத்தில் பேசுவதால் எனக்கு எதுவும் புரியவில்லை. கசாப், பாகிஸ்தான் என்ற இரு வார்த்தைகளை மட்டுமே என்னால் புரிந்து கொள்ள முடிகிறது'' என்றார்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் கசாப் காட்டவில்லை.

கடந்த முறை நீதிமன்றத்தில் ஆஜரான போது நீதிமன்ற நடவடிக்கைகள் தனக்குப் புரியவில்லை என்று கசாப் கூறினார்.

மும்பையில் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பாகிஸ்தானிலிருந்து வந்த லஷ்கர்- இ-தொய்பா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 166 பேர் கொல்லப்பட்டனர். 238 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகளில் அஜ்மல் அமீர் கசாப் மட்டுமே உயிருடன் பிடிபட்டார்.

# விமானத்தில் பிடிக்கப்பட்ட கைதிகள் 167 பேர் ஜமெய்க்காவில் விடுவிப்பு

கிங்ஸ்டன், ஏப். 22

ஜமெய்க்காவிலிருந்து புறப்படவிருந்த விமானமொன்றுக்குளிருந்த நபரொருவரால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட 167 பயணிகள் மீட்கப்பட்டுவிட்டார்கள். தற்போது விமான ஊழியர்களை மீட்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

கரீபியத் தீவான ஜமெய்க்காவின் சாங்ஸ்டர் நகரிலிருந்து ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணிக்கு கனடாவின் ஹாலிபேக்ஸ் நகருக்கு இந்த கேன்ஜெட் விமானம் புறப்படத் தயாராகிக்கொண்டிருந்தது.

இதில் சுமார் 170 பயணிகளும், 5 விமான ஊழியர்களும் இருந்தனர். அப்போது விமானத்திலிருந்த நபரொருவர் துப்பாக்கிமுனையில் விமானத்திலிருந்த அனைவரையும் பணயக் கைதிகளாகப் பிடித்தார்.

விமானத்திலிருந்த பெண் பயணி ஒருவர் இவ்விடயத்தை படு இரகசியமாக தனது கணவரிடம் கையடக்கத் தொலைபேசி மூலம் தெரிவித்தார். உடனடியாக அந்த பெண்ணின் கணவர் பொலிஸுக்குத் தகவல் கொடுத்தார். இதனால் விமானக் கடத்தல் இரகசியம் தெரியவந்தது.

இதையடுத்து, ஜமெய்க்கா இராணுவச் சிப்பாய்களும், பொலிஸாரும் விமான நிலையத்தைச்சுற்றி வளைத்தனர். ஜமெய்க்கா பிரதமர் ஸ்டீபன் ஹார்பரும் நேரில் சென்று நிலைமையை ஆய்வு செய்து வருகிறார்.

விமானத்தில் அந்த மர்ம நபருக்கு உதவியாக யாரும் இருக்கிறார்களா? அவர்கள் என்ன ஆயுதங்களை வைத்திருக்கின்றார்கள்? என தெரியாத நிலையில் பொலிஸார் அந்நபரை பேச்சுக்கு அழைத்தனர்

இதையடுத்து, அந்த விமானத்திலிருந்த பயணிகளில் 167 பேரை கடத்தல்காரர் விடுவித்துள்ளார். 7 விமான ஊழியர்களை மட்டும் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளார். பொலிஸார் தொடர்ந்து அந்த நபரிடம் பேச்சுகள் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் விமானத்தில் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டது என தெரிவிக்கப்பட்டது. ஆனால், அதில் யாருக்கும் எந்த காயமும் ஏற்படவில்லை என ஜமெய்க்கா அரசு அறிவித்துள்ளது.

இக்கடத்தல் குறித்து ஜமெய்க்கா தகவல் தொடர்புத்துறை அமைச்சர் டெரில் வாஸ் கூறுகையில், ''மனநலம் பாதித்தவர்தான் விமானத்தைக் கடத்தியுள்ளார். தீவிரவாதம் இதில் இடம்பெறவில்லை'' என்றார்.

''அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏதும் இல்லை. கியூபாவுக்குச் செல்ல ஏற்



பாடு செய்யவேண்டும் என்பதே அந்நபரின் ஒரே கோரிக்கையாகும். அந்நபரின் தந்தை உட்பட பலர் கடத்தல்காரரிடம் சமரசம் பேசினர். விமானத்தில் தற்போது எந்தப் பயணியும் இல்லை. அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டு விட்டனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பாக். எல்லைப் பகுதிகளில் விமானத் தாக்குதல்; 20 பேர் பலி

இஸ்லாமாபாத், ஏப். 22

பாகிஸ்தான் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில், தீவிரவாதிகளின் இலக்குகள் மீது போர் விமானங்களும், இராணுவ ஹெலிகொப்டர்களும் மேற்கொண்ட உக்கிர குண்டுத் தாக்குதல்களில் 20 தீவிரவாதிகள் பலியானார்கள்.

இம்மாநிலத்திலுள்ள கிலிஜூ என்னுமிடத்தில் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன. ஏற்கனவே, இராணுவம் மீது தலிபான்கள் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்குமுகமாகவே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் இராணுவச் சிப்பாய்கள் சென்ற வாகனங்கள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டது. கோகாட் என்னுமிடத்தில் நடந்த இந்தத் தாக்குதலில் 25 இராணுவச் சிப்பாய்கள் பலியானார்கள்.

இத்தாக்குதலுக்குத் தாங்கள்தாம் காரணம் என தலிபான்கள் பொறுப்பேற்றனர். அமெரிக்காவின் ஏவுகணைத் தாக்குதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல் நீடிக்கும் வரை பாகிஸ்தான் இராணுவத்தின் மீதான தாக்குதல் தொடரும் என்றும் தலிபான் தளபதி ஹக்கிமுல்லா தெரிவித்திருந்தார்.

## முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்காவின் கொள்கைகளில் எதுவித மாற்றமுமில்லை

### அல்-குவைதா தெரிவிப்பு

வாஷிங்டன் ஏப். 22

''அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முஸ்லிம்களுக்காக அமெரிக்காவின் எந்த ஒரு கொள்கையையும் மாற்றவில்லை. முஸ்லிம்களுக்கு எதிரான அமெரிக்காவின் போக்கும் நீடிக்கின்றது. அது கைவிடப்படவில்லை.''

- இவ்வாறு அல்-குவைதாவின் இரண்டாம் நிலைத் தலைவர் அல்-ஜவாஹிரி, புதிய ஒலிநாடாவொன்றின் வாயிலாக சுட்டிக்காட்டியுள்ளார். ஒசாமா பின்லேடனுக்கு அடுத்தபடியான முக்கிய தலைவர் இவர் எனக் கணிக்கப்பட்டுள்ளார்.

''முஸ்லிம்களுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுக்காகவும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, அமெரிக்காவின் கொள்கையில் எதையும் மாற்றவில்லை. பலஸ்தீனத்திலும், ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் முஸ்லிம்களை அமெரிக்கா தொடர்ந்தும் கொன்று குவித்து வருகிறது'' என்றும் அல்-ஜவாஹிரி அதில் சாடியுள்ளார்.

''அமெரிக்கா தொடர்ந்தும் முஸ்லிம்களின் வளங்களை கொள்ளையடித்து வருகிறது. அதன் இராணுவம் தொடர்ந்தும் முஸ்லிம் நாடுகளை ஆக்கிரமித்து வருகிறது. இவற்றில் மாற்றமில்லை. ஒபாமாவின் பேச்சில் மாற்றமுண்டு. ஆனால், அது கொள்கையில் கிடையாது'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ''முஸ்லிம் நாடுகளில் சுயநலமிக்க, ஊழல்பேர்வழிகளான துரோகிகள் ஆட்சியில் அமர்ந்துள்ளார்கள். இந்த போலி ஆட்சிக்கு முட்டுக்கொடுப்பதிலும், இந்த ஆட்சியாளர்களை ஆதரிப்பதிலும் அமெரிக்கா கூடிய அக்கறை செலுத்தி வருகிறது. இதிலிருந்தும் அமெரிக்கா பின்வாங்கவில்லை'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''ஒபாமா ஜனாதிபதியாகி விட்டார். எனினும், அமெரிக்கக் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. புஷ்ஷின் செயற்பாடுகளையே அவரும் தொடர்கிறார். ஆனால், வேறுவிதமான போர்வையில் அவர் அதைத் தொடர்கிறார்'' என்றும் அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரளியின் சுழலில் பணிந்தது பெங்களூர் அணி இரண்டாவது போட்டியில் சென்னை வெற்றி

போர்ட்எலிசபெத், ஏப்.22

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூர் ன ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 8 அணிகளும் மற்ற அணிகளுடன் தலா 2 முறை மோத வேண்டும். லீக் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு முன்னேறும்.

போட்டியின் 3ஆவது நாளான நேற்று முன்தினம் போர்ட்எலிசபெத்தில் நடந்த ஆட்டத்தில் டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், பீற்றர்ஸன் தலைமையிலான பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சூப்பர் கிங்ஸ் அணித் தலைவர் முதலில் துடுப் பாட்டத்தைத் தேர்வுசெய்தார். கடந்த போட்டியில் ஆடிய ஜேக்கப் ஓரம், துஷாரா நீக்கப்பட்டு முரளிதரன், அல்பி மோர்கல் ஆகியோர் சென்னை அணியில் சேர்க்கப்பட்டனர்.

ஆரம்ப ஆட்டக்காரர்களாக பார்த்தீவ் பட்டேல், ஹைடன் ஆகியோர் களம் இறங்கினார்கள். இருவரும் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஹைடன் அதிரடி யாக ஆடினார். பட்டேலும் அடித்து ஆடினார். இதனால் ஓட்டஎண்ணிக்கை கிடுகிடுவென உயர்ந்தது. சென்னை அணி 9.2 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

10 ஓவர்கள் முடிவில் விடப்படும் இடைவேளை முடிந்து களம் திரும்பய சென்னை (26 பந்துகளில் 2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்கள்) அணித்தலைவர் பீற்றர்ஸனின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் ஹைடன், ராவிட்டால் ரன்-அவுட் முறையில் வெளியேறினார். ஹைடன் 35 பந்துகளில் 9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 65 ஓட்டங்களைக் குவித்தார். முன்னதாக 22 பந்துகளில் அரைச் சதத்தை கடந்தார். ஐ.பி.எல். போட்டியில் அவர் அடித்த 3ஆவது அரைச்சதம் இதுவாகும்.

அதன் பின்னர் அணித்தலைவர் டோனி, சுரேஷ் ரெய்னாவுடன் ஜோடி சேர்ந்தார். ஆட்டத்தில் காணப்பட்ட வேகம் மெதுவாக குறைந்தது. டோனி 16 ஓட்டங்களுடனும், சுரேஷ்ரெய்னா 28 ஓட்டங் களுடனும் பிரவீன்குமாரின் பந்து வீச்சில் ஆட்டம் இழந்தனர். அல்பிமோர்கல் (5 ஓட்டங்கள்) 20ஆவது ஓவரின் கடைசி பந்தில் ஆட்டமிழந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைக் குவித்தது. பிளின்ரொப் 13 பந்துகளில் 2 பவுன்டரிகள், ஒரு சிக்ஸருடன் 22 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தார்.

பின்னர் 180 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி சிறிய இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்த வண்ணம் இருந்தது.

15.2 ஓவர்களில் பெங்களூர் அணி 87 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இதனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. முதல் ஆட்டத்தில் மும்பை இந்தி யன்ஸ் அணியிடம் தோல்வி கண்ட சென்னை அணி தனது முதல் வெற்றியை ருசித்தது. தனது முதல் ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வீழ்த் திய பெங்களூர் அணி முதல் தோல்வியை சந்தித்தது.


அபாரமாகப் பந்துவீசி 3 விக்கெட்டுக்களை வீழ்த்திய முரளிதரனை அணித்தலைவர் டோனி மற்றும் சக வீரர்கள் பாராட்டுகின்றனர்...

பெங்களூர் அணியில் கலீஸ் அதிகபட்சமாக 24 ஓட்டங்களை எடுத்தார். சென்னை அணி தரப்பில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும், பாலாஜி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

# தரவரிசையில் சானியா உயர்வு



புதுடில்லி, ஏப்ரல் 22

உலக மகளிர் ரென்னிஸ் ஒற்றையர் தரவரிசையில் இந்திய ரென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா 7 இடங்கள் முன்னேறி 93ஆவது இடத்திற்கு உயர்ந்துள்ளார்.

கடந்த வாரம் கார்ல்ஸ்டனில் நடைபெற்ற மகளிர் ரென்னிஸ் ஒற்றையர் சுற்றில் வீனஸ் வில்லியம்ஸிடம் போராடித் தோற்ற சானியா மிர்சா ஒற்றையர் தரவரிசைப் புள்ளிகளாக 692 புள்ளிகளைப் பெற்றுள்ளார். ஆனால் இரட்டையர் தரவரிசையில் சானியா ஒரு இடம் பின்னடைந்து 60ஆவது இடத்திற்கு வந்துள்ளார்.

அதேபோல் ஆடவர் இரட்டையர் தரவரிசையில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் 5ஆவது இடத்திலும், பூபதி மாற்றமில்லாமல் 9ஆவது இடத்திலும் உள்ளனர்.

# ருவென்ரி 20 உலகக் கிண்ணம்; நான் தேவையில்லை - சச்சின்



இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ருவென்ரி 20 உலகக் கோப்பைக்கான இந்திய அணிக்கு நான் தேவையில்லை என இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடந்து வரும் இந்தியன் பிரீமியர் லீக் ருவென்ரி 20 தொடரில் மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்டு வரும் சச்சின் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்கு தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2007இல் நடந்த ருவென்ரி 20 உலகக் கோப்பை அணியில் இருந்து விலகியதற்கு அப்போது நான் முழு உடல்தகுதியுடன் இல்லாததே காரணம். எனவே அணியினருக்கு சுமையாக இருக்க விரும்பாமல் விலகினேன் - என்றார்.

தற்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக அரைச்சதம் அடித்துள்ள நிலையில் மீண்டும் ருவென்ரி 20 அணியில் இடம்பிடிப்பீர்களா? - என்ற கேள்விக்கு, இல்லை என்று பதிலளித்த சச்சின், தற்போதைய இந்திய அணி சிறப்பான நிலையில் உள்ளது; எனவே நான் பங்கேற்க வேண்டிய அவசியம் இல்லை - என்றார்.

## ஐ.பி.எல். துளிகள்...

- ஐ.பி.எல். தொடரில் 100 சிக்ஸர்கள் அடித்த முதல் அணி என்ற பெருமை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு (102 சிக்ஸர்கள்) கிடைத்துள்ளது.
- அதிக ஓட்டக்குவிப்பில் ஷோன் மார்ஷுக்கு (616) அடுத்தபடியாக கௌதம் கம்பீர் (549) உள்ளார்.
- ஐ.பி.எல். தொடரில் விற்றோரி முதல் முறையாக ஆட்டநாயகன் விருது பெற்றுள்ளார்.
- 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்ற 2ஆவது அணி என்ற பெருமை டில்லி டேர் டெவில்ஸுக்கு கிடைத்துள்ளது.

# இடைவேளையால் சர்ச்சை!

கேப்டவுன், ஏப்.22

2ஆவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் போட்டி தென்னாபிரிக்காவில் நடந்து வருகிறது. இந்தப் போட்டியின்போது 10 ஓவர்கள் முடிந்ததும் ஏழரை நிமிடம் இடைவேளை விடப்படுகிறது. புதிதாக அமுல்படுத்தப்பட்டுள்ள இந்த இடைவேளை விளம்பரம் ஒளிபரப்புச் செய்ய வசதியாக விடப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

போட்டியின் நடுவில் விடப்படும் இந்த இடைவேளையால் ஆட்டத்தின் விறுவிறுப்பு பாதிக்கப்படுவதாக சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

இது குறித்து மும்பை இந்தியன்ஸ் அணித் தலைவர் டெண்டுல்கரிடம் கேட்டபோது, ''எங்களது முதல் ஆட்டத்தில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டோம். இருப்பினும் விளம்பரத்திற்காக விடப்படும் இடைவேளை அணியின் ஆட்டவேகத்துக்கு தடங்கலாக இருக்கிறது. ஏழரை நிமிட இடைவேளை என்பது கொஞ்சம் அதிகபடியான நேரம் தான் - என்று தெரிவித்தார்.

# பாகிஸ்தான் செல்ல நியூஸிலாந்தும் மறுப்பு

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி எதிர்வரும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டியில் விளையாட திட்டமிட்டிருந்தது.

ஆனால் லாகூரில் இலங்கை வீரர்கள் மீது தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து எல்லா நாடுகளும் பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்து வருகின்றன. பாதுகாப்பைக் காரணம்காட்டி நியூஸிலாந்து அணியும் பாகிஸ்தான் சென்று விளையாட மறுத்து விட்டது.

இதனால் இரு நாடுகளின் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் இடையே பொதுவான இடத்தில் போட்டியை நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்தப் போட்டித் தொடரை நியூஸிலாந்தில் நடத்தலாமா என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. இந்தப் போட்டித் தொடர் நியூஸிலாந்தில் நடத்த அதிக வாய்ப்பு இருக்கிறது.

## டானியல் விற்றோரிக்கு ஷேவாக் பாராட்டு

உலகின் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர் டானியல் விற்றோரி என்று டில்லி டேர் டெவில்ஸ் அணி தலைவர் ஷேவாக் பாராட்டியுள்ளார். இது குறித்து ஷேவாக் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அதிரடியாக ஓட்டங்களைக் குவித்த நிலையில், விற்றோரியைப் பந்துவீச அழைத்தேன். மிக முக்கியமான விக்கெட்டுகளை அவர் அடுத்தடுத்து வீழ்த்தியமை, எங்களுக்கு சாதகமாக அமைந்தது. ஷேன் வோர்ன், கும்ப்ளே வரிசையில் மிகச் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக விற்றோரி திகழ்கிறார். அவர்எந்தவகையான ஆடுகளத்திலும் [illegible] ஷேவாக்கூறினார்.

# கொல்கத்தா பயிற்சியாளருக்கு இந்திய முன்னாள் வீரர் கண்டனம்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டெக்கான் சார்ஜர்ஸ் அணியிடம் மோசமான தோல்வியை தழுவியது. இந்தத் தோல்விக்கு பயிற்சியாளர் ஜோன் புக்கனனின் அணுகுமுறை தான் காரணம் என்று முன்னாள் இந்திய அணி தலைவர் அஜித் வடேகர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், ''புக்கனன் தனது முட்டாள்தனமான மற்றும் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத திட்டங்களால் கொல்கத்தா அணியை மூழ்கடித்து வருகிறார். அவர் அணியை பிளவுபடுத்தியிருக்கிறார். அப்படி இருந்தும் அணி நிர்வாகம் அவருக்கு அளிக்கும் முக்கியத்துவத்தைப் பார்க்கையில் எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது.

அந்த அணி வீரர்களின் நடவடிக்கையை பார்க்கையில் அணியில் எல்லா விடயங்களும் சிறப்பாக இல்லை என்பதை உணர்த்துகிறது. கிரிக்கெட்டில் பெரிய போட்டிக்கு ஒரு நாள் மட்டுமே இருந்த நிலையில் அணித்தலைமையை மாற்றியதாக நான் கேள்விப்பட்டதில்லை. அந்த மோசமான சாதனையை புக்கனன் படைத்துள்ளார்'' - என்றார்.





## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் மகாலிங்கம்

*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், மின்சார சபை)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் திருமகள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகாலிங்கம் 17.04.2009 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் தவமணியின் பாசமிகு கணவரும் அபிராமி (முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை), அரவிந்தன் (மலேசியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான பூலோகசிங்கம், நவரத்தினம் மற்றும் அருளம்மா (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), கனகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.04.2009) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்: அபிராமி

(மகள் - முன்னாள் தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை).

இல.195, திருமகள் வீதி, அரியாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு அதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை!

## பாரதப் பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு



சென்னை ஏப். 22

விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் அதன்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒருபோர்க் குற்றவாளி என்றும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் 'டைம்ஸ் நவ்' தொலைக்காட்சிக்கு தெரிவித்துள்ளார் என இந்திய இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதி விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை நண்பர் எனத் தெரிவித்த இரண்டு நாள்களின் பின்னர் பிரதமர் மன்மோகன்சிங், விடுதலைப் புலிகளின் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு போர்க் குற்றவாளி என்றும் அதில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

தமிழக முதல்வர் தனது நிலைப்பாட்டை விளக்கியிருந்தார். அதேவேளை, காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் கபில் சிபில் காங்கிரஸ் கட்சியின் நிலைப் பாட்டை விளக்கியிருந்தார் என பிரதமர் மன்மோகன் சிங், 'டைம்ஸ் நவ்' தொலைக் காட்சிக்குத் தெரிவித்திருந்தார்.

பிரபாகரன் நல்ல நண்பன் என தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்திருந்த கருத்திற்கே மன்மோகன் சிங் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

கருணாநிதியின் கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாகும். ஆனால் காங்கிரஸின் நிலைப்பாடானது விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் ஒரு பயங்கரவாதி என காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் கபில் சிபில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

(மற்றொரு செய்தி 04 ஆம் பக்கத்தில்)

# அனுமதிப் பத்திரமின்றி பன்றி இறைச்சி கொண்டுசென்ற நபர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.22

நாவற்குழியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரம் இன்றி பன்றி இறைச்சி கொண்டு சென்ற நபர் நாவற்குழி சோதனைச் சாவடியில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இச் சம்பவம் கடந்த வாரம்இடம் பெற்றது.பொலிஸார் இந்த நபரை சாவகச் சேரி நீதிமன்றில் ஆஜர் செய்துபோதுவிளக்க மறியலில்.வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# இலங்கையின் இறைமையைப் பாதுகாப்பதற்கு இந்தியா வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி கூறவேண்டும்

## இராணுவத் தளபதி கருத்து

கொழும்பு, ஏப்.22

இலங்கையின் இறைமையையும் பிரதேசத்தின் தன்னாதிக்கத்தினையும் பாதுகாப்பதற்கென இந்திய அரசாங்கம் வழங்கிவரும் நேரடி உதவிகளுக்கு நாட்டு மக்கள் நன்றி தெரிவிக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஊடறுத்துள்ள பயங்கரவாதத்தினை ஒழிப்பதற்கு நட்புறவு நாடுகள் வழங்கிவரும் இராணுவ ரீதியிலான உதவிகள் பாராட்டிற்குரியவை என்று அவர் சென்னார்.

இது தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளதாவது:

இந்தியா உள்ளிட்ட பல நட்புறவு நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்குத் தேவையான அனைத்துவித இராணுவ உதவிகளையும் வழங்கி வருகின்றன. இந்நிலையில் இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தேவையான பயிற்சிகளையும் வழங்க அந்நாடுகள் முன்வந்துள்ளமை வரவேற்கத் தக்கதாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கம் முழு நாட்டினையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த பின்னர் ஈழ இராச்சியத்தை அமைப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கின்றனர் என்று பாதுகாப்புத் தரப்பினருக்கு இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின் மூலம் தெரியவந்துள்ளது.

அவர்களின் இந்தக் கனவு ஒருபோதும் நனவாகிவிட இராணுவத்தினர் இடமளிக்கப் போவதில்லை. இலங்கை மக்கள் ஒற்றுமையாக வாழ்வதன் மூலமே பலமான அபிவிருத்தியுள்ள நாட்டினைக் கட்டியெழுப்ப முடியும். இன அடிப்படையில் நாட்டைப் பிரிப்பது நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதை அனைத்து இன மக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.



இந்நிலையில் இராணுவத்தின் பலத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்துடன் இராணுவத்தின் பலத்தை ஒன்றுதிரட்டும் நீண்டகால நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டுமான இராணுவம் முற்றாக புனரமைக்கப்படவேண்டும்.

வடபகுதியிலும் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து பொதுமக்களிடமிருந்து விடுதலைப் புலி உறுப்பினர்களால் பிரித்தெடுக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளை மீண்டும் அவர்களுக்கு வழங்குவதற்கான சந்தர்ப்பம் அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ளமை பெருமைக்குரியது ஆகும்- என்றார் (அ-1)

# போரினால் மட்டும் சமாதானத்தை ஏற்படுத்த நினைத்தால் 50 வருடங்கள் பின்னோக்கிச் செல்வீர்கள்!

## நாடாளுமன்றில் சிறில் எம்.பி இடித்துரைப்பு



கொழும்பு, ஏப். 22

இன்னும் சில நாள்களில் போர் முடிந்துவிடும் என்கின்றீர்கள். இந்தப் போர் வெற்றி காரணமாக அரசியல் தீர்வு அவசியமில்லை. பேச்சு அவசியமில்லை. நாட்டில் நிரந்தர சமாதானத்தை இயல்பாகவே ஏற்படுத்தி விடலாம் என நீங்கள் நினைப்பீர்களானால், இவ்விடயத்தில் இன்னும் 50 வருடங்கள் பின்நோக்கிச் செல்லுகின்றீர்கள் என்பதை இந்த சபையிலே கூறிவைக்க விரும்புகிறேன்.

போர் தீர்வாகாது. போரினால் எதனையும் சாதிக்க முடியாது. இது வரலாறு கண்ட உண்மை. இந்தக் கொடிய போருக்கு முடிவு கட்டி ஒரு நல்லெண்ண சூழ்நிலையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சின் மூலம் நிரந்தரத் தீர்வு காணும்படி இந்த உயர்ந்த சபையிலே கேட்டுக்கொள்ளுகிறேன். அதன் பிற்பாடு எல்லாத் தேர்தல்களையும் நடத்துங்கள். அதையும் சந்திக்கத் தயார்.

மேற்கண்டவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ சிறில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தமது உரையில் மேலும தெரிவித்தவை வருமாறு -

இன்று இந்த நாட்டில் ஜனநாயகமும், மனித உரிமைகளும், சமூக நீதியும் முற்று முழுதாக செயலிழந்து செத்துப்போயுள்ள இந்தச் சூழ்நிலையில், வலுவான ஜனநாயகத்தின் தூண்களான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் விசேட ஏற்பாட்டுச் சட்டம் இந்த சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமானது நாட்டிலுள்ள மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகளின் எஞ்சியுள்ள அற்ப சொற்ப அதிகாரங்களையும், உரிமைகளையும் பறிப்பது மாத்திரமன்றி இதனால் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகப்போவது இந்த நாட்டின் சிறுபான்மை மக்களும் சிறுபான்மைக்கட்சிகளுமாகும்.

இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக வடக்கிற்கான 37 உள்ளூராட்சி மன்றங்களினதும் மாகாணசபையினதும் தேர்தலை உங்கள் விருப்பப்படி நடத்தி விட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்துள்ளார்கள். நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது என உலக நாடுகளுக்குக் காண்பித்தால் மாத்திரம் போதாது.

### கிழக்கில் என்ன நடக்கிறது?

நாட்டில் உண்மைச் சுதந்திரம், உண்மை ஜனநாயகம் தோற்றம் பெறவேண்டும். இன்று கிழக்கில் என்ன நடந்திருக்கிறது. இணைந்திருந்த வடக்கையும் கிழக்கையும் பிரித்து கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களினதும் மாகாணசபைகளினதும் தேர்தல்களை நடத்தினார்கள். அங்கு என்ன நடந்தது? என்ன நடக்கிறது? மக்கள் சுதந்திரமாகப் பேச முடியாது. மக்கள் சுதந்திரமாக நடக்க முடியாது. இராணுவ முற்றுகையில்தான் வாழ்கிறார்கள். இதே நிலைதான் வடக்கில் நடக்கிறது. இன்னும் நடக்கப் போகிறது. இந்தச் சூழ்நிலையில் ஜனநாயகத் தேர்தலை நடத்த முடியாது. மக்கள் சுதந்திரமாக வாக்களிக்க முடியாது.

வன்னிப் பெரும் நிலப்பரப்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறுகின்ற யுத்தத்தையும் அதன் பின்புலன்களையும் பார்க்குமிடத்து ஒரு தமிழின அழிப்பு நடவடிக்கைதான் பகிரங்கமாக நடைபெற்று வருகிறது.

### இந்த வருடத்தில் 5,000 பொதுமக்கள் பலி

இலங்கை அரசின் முப்படைகளும் ஒரு மூலையில் குவிந்து கிடக்கும் பொதுமக்கள் மீது தரை, கடல், ஆகாயமார்க்கமாகத் கண்மூடித்தனமான கிபீர், ஆட்லறி, கொத்துக் குண்டுகள், பல்குழல் பீரங்கிகள், மோட்டார் ஷெல் மற்றும் நீண்டதூர வீச்சுடைய துப்பாக்கிகள் சகிதம் மேற்கொள்ளுகின்ற பயங்கரமான தாக்குதல்களால் இந்த வருடத்தில் மாத்திரம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அவயவங்களை இழந்துள்ளனர். [illegible] மேற்பட்டோர் போதிய மருத்துவ வசதிகள் மற்றும் மருந்துகளின்றி ஸ்தலத்திலேயே இறந்துள்ளனர் என புள்ளிவிவரம் கூறுகிறது.

20.04.2009 இன்று வன்னியில் இராணுவத் தாக்குதல்களால் ஆயிரம் பொதுமக்கள் இறந்துள்ளனர். ஆயிரத்து 300 பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் சிறு குழந்தைகளும் அடங்குவர். 30 சதுர கிலோமீற்றரைவிடக் குறைந்த பரப்பளவுடைய இடத்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் மிகவும் நெருக்கமாக சிறு சிறு குடிசைகள் அமைத்து மழையிலும், வெய்யிலிலும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அவலவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இந்தப் பாதுகாப்பு வலயத்தினுள் எறிகணைகள், பல்குழல் பீரங்கிகள், கிளஸ்டர் குண்டுகள் வீழ்ந்து வெடிப்பதனால் தினம் 50தொடக்கம் 100வரையான பொதுமக்கள் துடிதுடித்து மரணிக்கின்றனர். 50தொடக்கம் 150 வரையிலான பொதுமக்கள் காயமடைகின்றனர். இவர்களில் சிறுபிள்ளைகள், பெண்கள், வயோதிபர்களும் அடங்குவர்.

குறுகிய காலத்திற்குள் பல்வேறு தடவைகளில் இடம்பெயர்ந்த இம்மக்கள் தமது பொருளாதார மூல வளங்களையும் தொழில் துறைகளையும் இழந்துள்ளதுடன் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிமிடங்களும் குண்டு வெடிப்புகளும், ஆகாயத் தாக்குதல்கள், ஷெல்வீச்சுகள் குறித்த அச்சத்துடன் தினம் மரணத்திற்குள் வாழ்ந்து 130 சிறார்கள் வைத்தியசாலையில் இறந்துள்ளார்கள்.

கடந்த வாரம்ஜே.வி.பி. உறுப்பினர் கொலை செய்யப்பட்டதும் அண்மையில் ருபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்டதால் மாத்தளை புனித தோமையார் மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் உயிரிழந்தும் சில மாணவிகள் அசாதாரணமான நிலைமைக்கு உள்ளானதும் இந்த நாடும் இந்த சபையும் ஒரு கணம் அதிர்ந்து போன துடன் ஓர் சோகமயமானது.

அந்தச் சோகத்தை நாங்களும் பகிர்ந்து கொண்டோம். உயிர் உன்னதமானது. அதற்கு என்ன விலை கொடுத்தாலும் ஈடாகாது. ஆனால், திருகோணமலையில் 6 வயது பள்ளி பாலகி மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதும், வன்னியிலே தினம் இராணுவ நடவடிக்கையாலும், பசி, பட்டினியாலும், நோயினாலும், நோய்க்கு மருந்தின்றியும் துடிதுடித்து மரணிக்கின்ற பச்சிளங் குழந்தைகள், பாடசாலை மாணவர்கள் மட்டில் இந்த நாட்டிலும், இந்த சபையிலும் எந்த அதிர்ச்சியும் இல்லை; எந்த சோகமும் இல்லை; எந்தக் கேள்வியும் இல்லை. ஏன்? அது ஆளும் இனம். இது ஆளப்படுகின்ற இனமா?

இலங்கைத் தீவின் நீண்டகால வரலாற்றில் புரையோடிக் கிடக்கும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு சிங்களத் தலைமைகள் சரியான தீர்வை வழங்கி, தமிழ் மக்களை சரிசமமாக மதிக்கத்தவறியதன் விளைவுதான் ஆயுதப் போராட் டம் பரிணமிக்கக் காரணமாயிற்று. அன்றைய, இன்றைய சிங்களத் தலைமைகள் விட்ட தவறின் காரணமாகவேதான் இந்த நாடு இன்று யுத்தத்தையும், யுத்தத்தின் விளைவான மரணங்களையும், பொருளாதாரப் பின்னடைவுகளையும், நிம்மதியற்ற வாழ்வையும் சந்திக்கவேண்டியுள்ளது. இதைச் சிந்தியுங்கள்!

வன்னியில் நிலவுகின்ற மனிதாபிமான நெருக்கடிகள், உயிரிழப்புகள் உடன் நிறுத்தப்படவேண்டுமானால், உடனடி யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு, ஐக்கிய நாடுகள் சபையின் முகவர் நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன யுத்தப் பிரதேசத்திலும், இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலும் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும் இந்தக் கொடிய போருக்கு எதிராகவும், சமாதானத்திற்கு சார்பாகவும் குரல் கொடுப்பவர்களை தேசத்துரோகிகள் என்கிறீர்கள். ஆனால், உண்மையை இந்தச் சபையிலே கூறாமலிருக்க முடியாது. இது தான் நாட்டிற்குச் செய்யும் துரோகமாகும்- என்றார். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயர்ரி ஹறகண்யுஹி நேற்றிரவு ஜெனீவாவில் இருந்து வெளியிட்ட நீண் [illegible]க்கையின் சில முக்கிய பகுதிகள் வருமாறு:

* அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ப் பிரதேசம் மிக வேகமாக சுருங்கிக் கொண்டு வருகிறது. இந்த நிலையில் அங்கு சிக்குண்டுள்ள பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்போர் காயமுற்றும் நோயுற்றும் பெரும் மனித அவலத்துக்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் இந்த நிலை குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆழ்ந்த கவலையும் கரிசனையும் கொண்டுள்ளது.
* பொதுமக்கள் தஞ்சம் கோரிச் சென்ற குறிப்பிட்ட பாதுகாப்புப் பகுதி பொதுமக்களால் நிரம்பி வழிகிறது. இந்த நிலைமை ஒரு பேராபத்தான கோர நிகழ்வு என்ற நிலையில் எந்த விதத்திலும் குறைந்ததல்ல. அங்கு நடைபெறும் யுத்தத்தினால் நூற்றுக் கணக்கான மக்கள் இறந்தொழிந்து விட்டனர். வைத்திய வசதி கிடைக்காத நிலையில் காயமுற்றவர்கள் அவஸ்தைப் படுகின்றார்கள். அதனாலேயே அரசாங்கப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையே நடைபெறக்கூடிய இறுதிச் சமர் குறித்து செஞ்சிலுவைச் சர்வ தேசக் குழு ஆழ்ந்த கரிசனை கொண்டுள் ளது. அத்தகைய சமர் நடைபெறும் இடத்தில் பொதுமக்கள் இறப்பதும் காயமடைவதும் மிகமிக அதிகமான எண்ணிக்கையாக உயரும்.
* ஆகையால் பொதுமக்கள் மத்தியில் உயிரிழப்புக்களையும் காயமுறுவதையும் மேலும் உண்டாக்கக் கூடிய இறுதிப் போரைத் தவிர்க்குமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இரு தரப்புக் களையும் எச்சரிக்கிறது.
* எல்லாச் சந்தர்பங்களிலும் இரண்டு தரப்பாரும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி ஞாபகப்படுத்த விரும்புகிறோம். எதிர்வரும் நாள்களிலும் மோதல்களினால் இடம்பெயர்ந்து பாதிக்கப்படும் பொதுமக்களை காப்பாற்றுவதில் உதவும் சகல நடவடிக்கை களையும் செஞ்சிலு வைச் சர்வதேசக்குழு மேற்கொள்ளும்.

இதேவேளை:- பாதுகாப்பு வலயத்துக்குள் சிக்குண்டுள்ள மக்களுக்குத் தேவையான இடர் போக்குவதிலும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடவும் ஏனைய சுயேச்சையான அமைப்புக்களும் மனிதாபிமான நடவடிக் கைகளும் அனுமதிக்கப்பட வேண்டும். (அ)

## நேற்றைய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தளன் பகுதியில் படையினர் திங்கட்கிழமை நடத்திய தாக்குதலில் சிக்கிய மக்களை முன்நிறுத்தி நேற்றுப் பாரிய தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இணையத் தளங்கள் தெரிவித்தன.

நேற்றைய தாக்குதல்கள் குறித்து இணையத்தளங்கள் வெளியிட்ட ஏனைய விவரங்கள் வருமாறு:

இத் தாக்குதலின்போது படையினர் அகோர ஷெல் மற்றும் கனரக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

படையினரின் நேற்றைய தாக்குதல்களில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மாத்தளன், பொக்கணை, இடைக்காடு, வலைஞர்மடம், இரட்டைவாய்க்கால், முள்ளிவாய்க்கால் பகுதிகள் மீதும் படையினர் நேற்று தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் - என்று உள்ளது. (அ)

## புலிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

படையினர் புதுமாத்தளன் பிரதேசத்தில் அமைந்திருந்த புலிகளின் இறுதி மணல் அணையை உடைத்து மக்களின் பாதுகாப்பான வெளியேற்றத்திற்கு வழியமைத்துக் கொடுத்ததை அடுத்து ஆயிரக் கணக்கான மக்கள் விடுவிக்கப் பட்ட பிரதேசங்களை நோக்கி வந்த வண்ணம் உள்ளனர். தமிழ் மக்கள் இன்று யார் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதை இந்த நிகழ்வு தெளிவாக எடுத்துக்காட்டுகிறது - என்றார். (அ-சி)

## முல்லைத்தீவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வெற்றிலைக் கேணியில் வைத்து சிறு படகுகள் மூலம் கரைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர். அங்கிருந்து பஸ்கள் மூலம் வடமராட்சிக் கும் தென்மராட்சிக் கும் அவர்கள் அனுப் பட்டு வருகின்றனர்.

தென்மராட்சிக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு அழைத்துவரப்பட்ட சுமார் 3 ஆயிரம் பேரில் ஆயிரம் பேர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திலும் 1,500 பேர் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியிலும் 500 பேர் வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஆயிரம் பேர் வடமராட்சியில் இரு பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

வந்துசேர்ந்தவர்களில் நோயாளர்கள் மற்றும் காயமடைந்தவர்கள் உடனடியாக பருத்தித்துறை, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றனர். (அ-1-207-70-131-226-224)

## வன்னியில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரத்து 600இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

அதைக் கேட்ட அமைச்சர்கள் ஸ்ரீகாந்தா மீது பாயத் தொடங்கினர். "இராணுவத்தினர் பொதுமக்களைக் கொலை செய்யவில்லை. சர்வதேசத்துக்குப் பிழையான தகவல்களைக் கொடுக்க ஸ்ரீகாந்தா எம்.பி. முயல்கிறார்." என அமைச்சர் மஹிந்த ரட்ணதிலக கூச்சலிட்டார்.

"அங்கு படையினர் மக்களைக் கொன்றனர் என்று பதுங்குகுழிகளுக்குள் இருக்கும் பிரபாகரனா உங்களுக்குத் தகவல் கொடுத்தார்?" என்று ஸ்ரீகாந்தாவிடம் கேட்டார் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்தகமகே.

பொதுமக்கள் கொல்லப்பட்டனர் எனத் தெரிவித்த ஸ்ரீகாந்தா எம்.பியின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

அப்போது எழுந்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, "வன்னியில் சிவிலியன்களைப் படையினர் கொன்றனர் என்ற தகவலை ஸ்ரீகாந்தா எங்கிருந்து பெற்றார் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அவர் பிழையான தகவல்களை வழங்கி சர்வதேச சமூகத்தைத் தவறாக வழிநடத்த முயல்கின்றார்'' என்று கூறினார். இதனால் ஸ்ரீகாந்தாவுக்கும் அமைச்சர்களுக்குமிடையில்கடும்வாய்ச் சண்டை நடைபெற்றது. (அ-சி)

## தாம் சரணடையப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செய்தி நிறுவமான "ரொய்ட்டருக்கு'' அளித்துள்ள பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ள புலித்தேவன், நிரந்தரமான போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனைத்துலக சமூகம் உடனடியாகத் தலையிட்டு அதற்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் எனவும் கோரியிருக்கின்றார்.

முல்லைத்தீவின் கடற்கரைப் பகுதியில் உள்ள பாதுகாப்பு வலயப் பகுதியின் எல்லைக்கு அருகாமையில் தான் இருப்பதாக தெரிவித்துள்ள புலித்தேவன் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் தம்முடனேயே இருப்பதாகவும் சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு எதிரான போரை அவரே நெறிப்படுத்தி வருவதாகவும், மக்களுக்கு ஆதரவையும் உதவிகளையும் அவர் வழங்கி வருவதாகவும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாம் ஒருபோதும் சரணடையப் போவதில்லை. நாம் தொடர்ந்தும் போர் புரிவோம். தமிழ் மக்களின் ஆதரவுடன் இந்தப் போரில் வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

தமிழ் மக்களை படையினர் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். நேரம் வேகமாகச் சென்றுகொண்டிருக்கின்றது. இரத்தக்களரி ஒன்று இடம்பெறவிருப்பதால் அனைத்துலக சமூகம் இந்த விடயத்தில் தலையிட வேண்டும்.

அரசாங்கப் படைகள் திங்கட்கிழமை மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டும் 2 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்தும் உள்ளனர்.

பொதுமக்கள் எமக்கு முழுமையான ஆதரவை வழங்கி வருவதுடன், எ[illegible]முடன் இணைந்தும் போராடுகின்றனர். ஏனென்றால் விடுதலைப் புலிகள் அமைப்பு அந்த மக்களுக்காகத்தான் போராடுகின்றது. அதனால்தான் அவர்கள் சுயவிருப்புடன் எமது அமைப்பில் இணைந்து போராடுகின்றனர்- என்றார். (அ)


21ஆவது வருடக் கல்விச் சேவையில்...
O/L DAY CLASS வகுப்புக்கு
தனித்துவமான ஒரே நிறுவனம்!
O/L DAY CLASS.
பிரிவு II ஆரம்பம்
24.04.2009 வெள்ளி காலை 8மணி
★ இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
★ கணித வகுப்பு மாதத்தில் 48மணித்தியாலம்
★ அனுமதிகள் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L 2011 - புவியியல்
ஆசிரியர்:-N.S.சங்கர் B.A.(Hons) Geog.
ஆரம்பம்:- 22.04.2009 புதன் 4.00pm
* O/Lஇல் புவியியல் கற்காத மாணவர்களுக்கு விஷேட வகுப்புக்கள்.
* A/L 2009, 2010 பிரிவுகளும் நடைபெறுகின்றன.
அற்லஸ் புவியியற்கல்வி நிலையம், மயிலணி - சிவன்கோயில் முன், மயிலணி (ஜெற்மோட்டோர்ஸ் லேன்) சுன்னாகம்.

பிரத்தியேக வகுப்பு
A/L 2011 ஆரம்பம் - 25.04.2009
அளவையியல் – N.பிரதீபன்
வரலாறு – பி.ஜான்ஸி
தொடர்புகளுக்கு:-
இல.68, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச் சந்தி)
தொ.பே:- 021 222 9550

தொடர் கருத்தரங்கு
A/L 2009 முற்றிலும் எதிர்பார்க்கை
கணக்கீடு
திரு. பாலகஜன் H.N.Dip-in-Acc.
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்
* ஒவ்வொரு வியாழனும் 10Am - 2Pm வரை நடைபெறும்.
* கருத்தரங்கு ஆரம்பம்: 30/04/2009 வியாழன் மு.ப. 10மணி
* அனுமதி பெறும் இடம் - BEACON - யாழ்நகர்.
பிரத்தியேக வகுப்புக்கள் பின்வரும் பிரிவுகளுக்குஉங்கள் இடங்களில் கற்பிக்கப்படும்.
* A/L * AAT
* CBF, DBF * B.Com
* HNDA
உங்கள் தொடர்புகளுக்கு 0777529113
தகுதி இருக்கும் போதுதான் கற்பித்தலில் தரமும் இருக்கும்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
A/L 2011
தமிழ் S.சிவா
கிறிஸ் - L.மேரி
நாடகம் - J.ஜோண்
அரசியல் - T.கஜன்
புவி - A.றாஜா
இந்து - S.காந்தி
அளவை - R.றமணன்
Eng - ஆசிரியர்
Econ.NB. கஜீதரன்
O/L DAY CLASS

முக்கிய அறிவித்தல்
எதிர்வரும் 23.04.2009 வியாழக்கிழமை 2009, 2010, 2011 வகுப்புக்கள் சனி, ஞாயிறு நேர அட்டவணைப்படி நடைபெறும்.
2011 CHEMISTRY
BY. MR. சிவத்திரன்
புதன் 11.30 (22.04.2009)
* DAY CLASS வழமை போல் நடைபெறும்.
NEW SEIENCE HOLL
JAFFNA

Diploma in English
★ Spoken with Grammar.
★ Phonetics Practices
★ Computer Based Practices
★ Practice Exercises
★ Spoken Practices.
Letter Writing.
★ Listening..
New Batch :25.04.2009 07.30 PM
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் நேரில்,
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS
Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com


## மரண அறிவித்தல்

### குமாரவேலு சண்முகநாதன்

*(இளைப்பாறிய அதிபர், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்)*

நீர்வேலி மத்தியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு சண்முகநாதன் நேற்று 21.04.2009 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பாலாம்பிகையின் (இளைப்பாறிய ஆசிரியை, நீர்வேலி இந்து த.க பாடசாலை) அன்புக் கணவரும் கௌசலா (ஆசிரியை, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்) குகதாஸ் (கணக்காளர், புனர்வாழ்வுப்பிரிவு, செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் தந்தையும் நடராசா (செயலாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர்) கோமதி (ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சீயாக்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
ச.குகதாஸ்(மகன்)


வெளிவந்து விட்டது
மனோரமா
இயர் புக் - 2009
(வெற்றிக்கு வழி காட்டும் பொது அறிவுக் களஞ்சியம்)
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

TVS
இப்பொழுது விற்பனையில் * scooty Pep +
TVS LANKA (Pvt.) Ltd.
அங்கீகாரம் பெற்ற யாழ். விற்பனை முகவர்
பசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இலவசம்
* மூன்று சேவிஸ்
* ஜக்கற்
* ஹெல்மெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.